வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 18.02.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 75 | பக்கங்கள் : 16




# இந்த வருட இறுதிக்குள் உள்ளூராட்சித் தேர்தல்!



## தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர்

கொழும்பு, பெப்ரவரி 18

“எதிர்வரும் செப்ரெம்பர் 20 ஆம் திகதிக்கு பின்னர் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கும். அநேகமாக, இந்த வருட இறுதிக்குள் உள்ளூராட்சி தேர்தலை நடத்த முடியும்”, இவ்வாறு தெரிவித்துள்ளார் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் ஜி. புஞ்சிஹேவா. 15

## எரிபொருள் விலைகளை உடன் உயர்த்தவேண்டும்

### மத்திய வங்கி ஆளுநர் அரசிடம் கோரிக்கை

கொழும்பு, பெப். 18

எரிபொருள் விலையை அதிகரிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்ந்து நட்டமடைந்து வருவதால் தொடர்ந்து கூட்டுத்தாபனத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாமல்போகுமென மத்திய வங்கியின் ஆளுநர் கூறியுள்ளார்.

எரிபொருள் விலையை அதிகரிக்காவிட்டால் 15

## பூஸ்டர் டோஸ் பெற்றவர்களுக்கே திருக்கேதீஸ்வரத்துக்கு அனுமதி!

### மன்னார் சுகாதார பணிப்பாளர்

மன்னார், பெப். 18

சிவராத்திரி திருநாளான எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி முழுமையாக தடுப்பூசி பெற்றவர்கள் மட்டுமே திருக்கேதீஸ்வரம் ஆலயத் திருவிழாவுக்கு அனுமதிக்கப்படுவர் என்று மன்னார் மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் ரி. வினோதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், 15

## அதிர்ஷ்டத்தை நம்பிய பெண் 2 இலட்சம் ரூபாயை இழந்தார்!

யாழ்ப்பாணம், பெப். 18

அதிர்ஷ்ட இலாபத்தில் பெருந்தொகைப் பணம் கிடைத்ததாக நம்பிய பெண் அதைப் பெறுவதற்கு ஆசைப்பட்டு ஒரு இலட்சத்து 90 ஆயிரம் ரூபாயை இழந்துள்ளார்.

இதேபோன்று, வெளிநாட்டிலிருந்து வந்த 15



## வாயில்களை மூடி போராட்டம் செயலிழந்தது யாழ். பல்கலை!

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வாயில்களை மூடி மாணவர் குழு ஒன்று நடத்திய போராட்டத்தால் அதன் செயல்பாடுகள் நேற்று முடங்கின.

போராட்டத்தால் பலநூறு மாணவர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள் பல்கலைக்கழகத்துக் 15

## கச்சதீவுத் திருவிழாவில் பக்தர்கள் பங்கேற்க தடை!

யாழ்ப்பாணம், பெப். 18

கச்சதீவு அந்தோனியார் தேவாலயத் திருவிழா இம்முறையும் பக்தர்கள் பங்கேற்பின்றியே நடைபெறும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முடிவு செய்துள்ளார் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மயிலிட்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு 15

## அரசின் பங்காளி கட்சிகள் விமல் வீட்டில் ஒன்றுகூடல்!

கொழும்பு, பெப். 18

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கூட்டணிக் கட்சிகளின் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் அவசர சந்திப்பு அமைச்சர் விமல் வீரவன்ஸவின் இல்லத்தில் நடைபெற்றுள்ளது.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பாரதூரமான பிரச்னைகளைத் தீர்ப்பது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

இதனடிப்படையில், அந்தப் பிரச்னைகள் தொடர்பில் யோசனைகளைத் 15

## தாதியர்களின் கோரிக்கையை நிறைவேற்றுமாறு பணிப்புரை

### அதிகாரிகளுக்கு விடுத்தார் ஜனாதிபதி

கொழும்பு, பெப். 18

தாதியர்களின் அங்கீகரிக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டின் தற்போதைய நிதி நிலைமையை கருத்திற்கொண்டு, முழு அரச சேவையும் பாதிக்காதவாறு அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளை முன்வைத்து கடந்த 09 நாட்களுக்கு முன் 15

## வெளிநாடு செல்வோருக்கான பி. சி. ஆர். கட்டணம் ரூ. 6,500!

### இன்று முதல் நடைமுறை

யாழ்ப்பாணம், பெப். 18

வெளிநாட்டுப் பயணத்துக்கான பி. சி. ஆர். பரிசோதனைக்கான கட்டணமாக இன்று வெள்ளிக்கிழமை முதல் சகலரிடமும் 6 ஆயிரத்து 500 ரூபாய் அறவிடப்படும் என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் நந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில், 15

## திங்களன்று மருத்துவர்கள் அடையாள வேலைநிறுத்தம்!

கொழும்பு, பெப். 18

மருத்துவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை அடையாள பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

சம்பளக் கொள்கையை மீறி தீர்மானம் எடுக்கப்படுவதாகக் குற்றஞ்சாட்டியே இந்தப் பணிப் புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுகின்றது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில், “சம்பளத்தை அதிகரிப்பதாக இருந்தால் அதனை அரச கொள்கைக்கு அமையவே மேற்கொள்ள வேண்டும். எனினும், 15

## தொற்றுக்கு 27 பேர் பலி!

கொழும்பு, பெப். 18

நாட்டில் கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் 27 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 30 - 59 வயதுப் பிரிவினரில் 4 ஆண்களும், 15

## அப்பாவிகளை சிறையில் தள்ளும் பயங்கரவாத தடை சட்டம் எதற்கு?

### பேராயர் மல்கம் ரஞ்சித் கேள்வி



கொழும்பு, பெப். 18

“பயங்கரவாதத் தடைச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும் அல்லது முழுமையாக மாற்றப்பட வேண்டும். ஏனெனில், இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன் படுத்தி குற்றவாளிகளைத் தப்பிவிட்டு அப்பாவிகளையே ஆட்சியாளர்கள் சிறையில் அடைத்து வருகின்றனர்.” இவ்வாறு 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

ஆட்சி மாற்றம் ஒன்றுக்கு மேற்குலகு முயன்று கொண்டிருப்பது குறித்து நேற்றைய தினம் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அதற்கு உலகத் தமிழர் இயக்கத்தின் அறிக்கை ஒன்றை மேற்கோள் காட்டியிருந்தேன்.

அதனைப் படித்துவிட்டு நண்பர் ஒருவர் தொடர்பு கொண்டு கேட்டார், "அது என்ன அந்த அறிக்கையில் உமக்குத் தேவையான பகுதியை மாத்திரம் எடுத்து, ஒருவரை குறிவைத்து தாக்கியிருக்கிறீர். அதற்காகத்தானே அந்த அறிக்கையையே மேற்கோள் காட்டினீர்", என்று அவர் தொடந்துகொண்டே போனார்.

"அந்த அறிக்கையில் இருந்து முக்கிய விடயம் ஒன்றை வேண்டும் என்றே தவிர்த்திருக்கிறீர்", என்றும் அவர் என்மீது புகார் பட்டியலை அடுக்கிக்கொண்டே போனார்.

"அந்தப் பத்திக்கு என்று ஆசிரியர் ஒரு 'லிமிற்' தந்திருக்கிறாரே. எல்லா விடயத்தையும் ஒரே நாளில் இந்தப் பத்தியில் அடக்கிவிட முடியாதல்லவா", என்று அவரை சமாளிக்க முயன்றேன்.

அவர் விடுவதாக இல்லை. "நீர் அந்த அறிக்கையை ஒருதடவை மீண்டும் படித்துவிட்டு காத்திருங்கள். நான் சில நிமிடங்களில் மீண்டும் அழைக்கிறேன்" என்று கூறிவிட்டு, தொடர்பைத் துண்டித்துக்கொண்டார்.

நான் அந்த அறிக்கைய மீண்டும் படித்தபோது அவர் இந்த விடயத்தைப்பற்றி குறிப்பிடாமல் விட்டதைத்தான் கூறுகிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

அந்த அறிக்கையில் இருந்த மற்றுமொரு முக்கிய விடயம் இதுதான்:

இலங்கை தொடர்பில் கடந்த வருடம் நிறைவேற்றப்பட்ட 46-1 தீர்மானத்தின் அடிப்படையில் இந்த மாதம் தொடங்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் 49ஆவது கூட்டத்தொடரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பான அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளார்.

மனித உரிமை ஆணையாளரின் எழுத்துமூல அறிக்கை வெளியாகவுள்ளது. இந்த அறிக்கைக்கான தரவுகளை சேகரிப்பதற்கு டிசெம்பர் 31ஆம் திகதி வரை காலஅவகாசம் இருந்தது. ஆனால், தமிழ் அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள், பாதிக்கப்பட்ட தரப்புகள், புலம்பெயர் தமிழர் அமைப்புகளிடமிருந்து தமக்கு எவ்வித அறிக்கைகளோ முறைப்பாடுகளோ கிடைக்கவில்லை என மனித உரிமைகள் ஆணையாளரின் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதுதான் அந்த அறிக்கையில் இருந்த மற்றுமொரு முக்கிய விடயம். அதனை நான் படித்து முடித்துவிட்ட பின்னர், நண்பரிடமிருந்து மீண்டும் அழைப்பு வந்தது.

நான் சொன்னேன்: "இதைத்தானே சொன்னீர். ஆனால், நமது சம்பந்தன் ஐயா ஏற்கனவே ஐ. நாவுக்கு கடிதம் எழுதிவிட்டாரே. அந்த அறிக்கையில் எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை என்று எழுதியிருப்பது தவறுதானே. அதுதான் நான் அதைப்பற்றி குறிப்பிடவில்லை", என்றேன்.

"சம்பந்தன் ஐயா கடிதம் எழுதியது எல்லாம் உண்மைதான். ஆனால், அவர் அறுபது வருசமாக எழுதிக்கொண்டிருப்பதைத்தானே இப்போதும் எழுதிக்கொண்டிருக்கிறார்.

இன்றைய உலகில், ஒரு விடயத்தை சொல்வது எப்படி என்பது சம்பந்தன் ஐயாவுக்கு தெரியாவிட்டாலும் அவரோடு இருப்பவர்களுக்காவது தெரியவேண்டாமா? குறிப்பாக, சட்டத்தரணிகளுக்கு தெரியவேண்டாமா? அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னரும் தமிழ் மக்கள் எதிர்கொண்ட பிரச்னைகளை அவற்றின் ஆதாரங்களுடன் - ஒரு வழக்கை தாக்கல் செய்வதெனில் எப்படி சாட்சியங்கள், தரவுகளுடன் தாக்கல் செய்வோமோ அதேபோல- நடந்த ஒவ்வொரு சம்பவங்களுக்கும் ஆதாரங்களுடன் ஆவணப்படுத்தி அல்லவா அனுப்பவேண்டும்.", அவர் எனக்கு பாடம் எடுத்துக்கொண்டிருந்தார்.

அவரை இடைமறித்து நான் சொன்னேன்.

"கொஞ்சம் பொறுங்கள். இனித்தான் எமது தலைவர்கள் கடிதம் எழுதுவதற்காக கூடிக் கதைக்கவிருக்கிறார்கள். அதில் ஒற்றுமை வந்தால் ஒரு கடிதம் அனுப்புவார்கள். இல்லையெனில் தனித்தனியாக அனுப்புவார்கள். அதில் எப்படி எழுதுகிறார்கள் என்று பார்த்துவிட்டு கதைப்போம். சம்பந்தனுக்கு போட்டியாக தமிழ் அரசில் இருந்தும் மற்றுமொரு கடிதம் போகவிருக்கிறதாம். கொஞ்சம் பொறுத்திருப்போம்" என்றேன்.

"ஓமோம், கூட்டத்தொடர் ஆரம்பிப்பதற்கு முதல்நாள் அனுப்பச் சொல்லுங்கள். இவர்களின் கடிதத்திற்காகத்தான் மனித உரிமைகள் ஆணையாளர் அம்மையார் பார்த்துக்கொண்டிருக்கிறார்" என்று சொல்லிவிட்டு, அவர் தொடர்பை துண்டித்துக்கொண்டார்.

- ஊர்க்குருவி

# முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன் முன்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம்

முல்லைத்தீவு, பெப். 18

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் தமக்கான சம்பள அதிகரிப்பு மற்றும் நிரந்தர நியமனம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்னால் நேற்று முற்பகல் 10.00மணியளவில் முன்னெடுத்தனர்.



தங்களுக்கு மாதம் வெறுமனே ஆறாயிரம் ரூபா கொடுப்பனவு மட்டுமே வழங்கப்படுவதைச் சுட்டிக்காட்டிய அவர்கள், இதனால் குடும்பத்தில் பல்வேறு பிரச்னைகளுக்கு உள்ளாவதாக கவலை வெளியிட்டனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு தெரிவித்தும் இதுவரை உரிய தீர்வுகள் கிடைக்கப்பெறவில்லை. எனவே எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதிருப்பதால் மாவட்டங்களில் கவனயீர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அவர்கள் கூறினர்.

போராட்ட முடிவில் தங்களது கோரிக்கைகள் உள்ளடங்கிய மகஜரை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனிடம் கையளித்தனர்.

அதனைப் பெற்றுக்கொண்ட மேலதிக அரசாங்க அதிபர் அவர்கள் கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்களின் ஆதங்கங்களை கேட்டறிந்து கொண்டதுடன் குறித்த கோரிக்கைகள் உரிய நடவடிக்கைகளுக்காக வடமாகாண ஆளுநர் மற்றும் கல்வி அமைச்சுக்கு முறைப்படி அனுப்பிவைக்கப்படுமென தெரிவித்தார்.

(அ)

## 'யாவர்க்கும் நலம்' கருத்தமர்வு நாளை

யாழ்ப்பாணம், பெப். 18

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு பிரதி சனிக்கிழமைகளில் நடத்தும் 'யாவர்க்கும் நலம் ' மெய்நிகர் வழி நிகழ்வில் நாளை சனிக்கிழமை "வாய்ச் சுகாதாரம் பேணுதல்" எனும் தலைப்பில் கருத்தமர்வு இடம்பெறவுள்ளது.

நாளை இரவு 7 மணி தொடக்கம் 9 மணி வரை இடம்பெறவுள்ள இந்தக் கருத்த மர்வில் பங்கேற்க விரும்பு வோர் சூம் செயலி மூலம் 899 8528 2023 என்ற அடையாள எண் மூலம் 354485 என்ற கடவுச் சொல்லைப் பயன்படுத்தி இணைந்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அச்சுவேலியில் நேற்று கையெழுத்து போராட்டம்!



யாழ்ப்பாணம், பெப். 18

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக் கோரிய கையெழுத்து போராட்டம், அச்சுவேலி பிரதான பஸ் நிலையத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இளைஞர், யுவதிகள் விசாரணை இன்றி கைது செய்யப்பட்டு, நீண்டகாலமாக சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள மிகவும் மோசமான சட்ட ஏற்பாடுகளை கொண்ட பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியான கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த கையெழுத்து போராட்டத்தில் கிராமங்கள்தோறும் பொதுமக்களின் கையெழுத்து பெறப்படுகின்றன. பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தலைமையிலான அணியினர், நேற்றையதினம் பொதுமக்களிடம் இருந்து கையெழுத்தைப் பெற்றுக் கொண்டனர்.

## யோக கலை பயிற்சி நாளை ஆரம்பம்!

யாழ்ப்பாணம், பெப். 18

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு ஏற்பாடு செய்துள்ள மகளருக்கான யோகக் கலைப் பயிற்சி நெறி நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியில் ஆர்வமுடையோர் அனைவரும் பங்கேற்றுப் பயன்பெற முடியும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஐ)

# இ.மி.ச. ஓய்வூதிய சங்கத்திற்கு புதிய நிர்வாகக் குழு தெரிவு!

யாழ்ப்பாணம், பெப். 18

இலங்கை மின்சார சபையின் ஓய்வூதிய நலன்புரி சங்கத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகக் குழு தெரிவும் அண்மையில் இடம்பெற்றது.

சுன்னாகம் இலங்கை மின்சார சபை பாவனையாளர் சேவை நிலையத்தில் இடம்பெற்ற புதிய நிர்வாகத் தெரிவில், தலைவராக எஸ். ஞானகணேசன், உபதலைவராக அ. நாகராஜா, செயலாளராக அன்ரன் ஞானப்பிரகாசம், உபசெயலாளராக எஸ். நடராஜா, பொருளாளராக எஸ். தவராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன், ம. விஜயசிறி, ப. ஜீவரட்ணம், ம. அனந்தராசன், ஆர். தர்மகோகிலன், ம. தங்கராசா ஆகியோர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)

## பாராளுமன்ற கூட்டத்தொடர் நடைபெறும் திகதி அறிவிப்பு

கொழும்பு, பெப். 18

எதிர்வரும் பாராளுமன்ற அமர்வை பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக சபைத் தலைவர் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார். (அ)

# விடுதலைப் புலிகளின் கல்விக் கழகத்தின் முல்லை. பொறுப்பாளர் காலமானார்!

புதுக்குடியிருப்பு, பெப். 18

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கல்விக் கழகத்தின் முல்லைத் தீவு மாவட்ட பொறுப்பாளராக செயல்பட்டிருந்த அன்பு என்று அழைக்கப்பட்ட கந்தசாமி நாகேந்திரராசா காலமானார்.

விடுதலைப் புலிகள் செயல்பட்ட காலப் பகுதியிலேயே நரம்பு சார்ந்த நோய்த் தாக்கத்துக்கு உட்பட்டிருந்த அவர் நீண்ட காலமாக நோய்ப் பாதிப்பை எதிர்கொண்டிருந்தார். இந்நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை அவர் காலமானார். அவரின் இறுதிக் கிரியைகள் புதுக்குடியிருப்பில் உள்ள அவரின் இல்லத்தில் இடம் பெற்றன என்ற அறிய வருகின்றது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
18.02.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், மாசி 06

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# இந்தியாவை நெருங்குதல்?

இந்தியப் பிரதமருக்கு எதிராகக் கறுப்புக் கொடி காண்பித்தவர்கள், இப்போது டீசல் கப்பலுக்கு வரவேற்பு நடத்துகின்றனர் - என்று சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கின்றார். எதிரணி, ஆளும் தரப்பை நோக்கி இவ்வாறான கருத்துக்களை முன்வைப்பது ஆச்சரியம் தரும் ஒன்றல்ல. ஆனால், அண்மைக்காலமாக அரசாங்கம் இந்தியாவை நெருங்கிச் செல்லும் இராஜதந்திரத்தை முன்னெடுத்து வருவது வெளிப்படையான ஒன்று. முன்னைய கசப்பான விடயங்களை மெதுவாகப் போக்கும் காரியத்தை மொறகொட கச்சிதமாகச் செய்வதாகவே தெரிகின்றது. இந்தியாவிலிருந்து அதிகம் விலகினால், அது நீண்ட காலத்தில் ஆபத்தானது என்பதை அரசாங்கம் உணர்ந்திருப்பதுபோல் தெரிகின்றது. கொழும்பு இந்தியாவுடன் நெருங்கிச் செல்லும்போது, ஈழத் தமிழர்கள் விடயத்தில் இந்தியா அமைதியடைந்துவிடலாம் என்னும் அச்சம் ஒன்றும் தமிழ் சூழலில் உண்டு. இவ்வாறானதொரு சூழலில்தான் ஆறு கட்சிகள் ஒன்றிணைந்து, இந்திய பிரதமரின் தலையீட்டை கோரியிருந்தன.

ஈழத் தமிழர் அரசியலில் இந்தியா எக்காலத்திலும் தவிர்க்க முடியாத சக்தியென்பதை எவராலும் மறுதலிக்க முடியாது. இந்தியாவை தவிர்த்துச் செல்ல வேண்டுமென்று ஈழத் தமிழர்கள் விரும்பினால்கூட, அது முடியாது. ஏனெனில், இந்தியாவை விரோதித்துக் கொண்டு வேறு எந்தவொரு நாடும் ஈழத் தமிழர்களுக்கு உதவி செய்யப் போவதில்லை. எனவே, இந்தியாவை நோக்கிச் செல்வது விருப்பம் என்பதற்கு அப்பால், அது இந்தப் பிராந்தியத்தின், உலக அரசியலில் யதார்த்தம். 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு பின்னர் தமிழர் பிரச்னை தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட எந்தவொரு முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. இந்தியாவின் பங்களிப்பு இல்லாமலேயே, அனைத்து முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன.

தமிழர்கள் விடயத்தில் இந்தியாவின் முக்கியத்துவம் எப்படியானதோ - இதேபோன்றுதான், இலங்கை விடயத்திலும். இந்தியாவின் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்படும் சந்தர்ப்பங்களில் சிங்கள ஆட்சியாளர்கள் நெருக்கடிகளை சந்திக்க நேரிடுகின்றது. 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது, மஹிந்த ராஜபக்ஷ உடனடியாகவே இந்திய உளவுத் துறையான றோவின் மீதுதான் குற்றம் சாட்டியிருந்தார். அதன் பின்னர் அமெரிக்க, பிரித்தானிய உளவுத் துறைகள்மீதும் குற்றம் சாட்டியிருந்தார்.

இது பற்றி நேர்காணல் ஒன்றில் கேட்கப்பட்ட போது - அவர்கள் நினைத்தால் அதிகம் செய்யமுடியுமென்று, அப்போது - முன்னாள் பாதுகாப்பு செயலாளராக இருந்த கோட்டபாய ராஜபக்ஷ பதிலளித்திருந்தார். அதிக சீன சார்பினால் வரக்கூடிய ஆபத்துக்களை ஆட்சியாளர்கள் உணர்த்திருக்கக்கூடும். இன்றைய உலகம் அதிகம் சீன எதிர்ப்பை மையப்படுத்தியே நகர்கின்றது. இந்த சிக்கலான அரசியல் ஆட்டத்துக்குள், இந்தியாவுடன் நல்லுறவை பேணிக்கொள்வதன் மூலம் உலகத்தை எதிர்கொள்ள முடியுமென்று அவர்கள் கணிக்கக்கூடும்.

சிங்கள ஆளும் வர்க்கத்திடம் பலமானதொரு இராஜதந்திர பாரம்பரியம் இருக்கின்றது. அதனோடு ஒப்பிட்டால் ஈழத் தமிழர் அரசியல் சமூகம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றது. இதனைப் புரிந்து கொண்டே ஈழத் தமிழர் அரசியல் சமூகம் செயலாற்ற வேண்டும். மற்றவர்களின்மீது குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது மிகவும் இலகுவானது. ஆனால், குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதால், கடந்தகாலத்தை தோண்டியெடுத்து விவாதங்கள் செய்வதால் எதனையும் சாதிக்க முடியாது. அது மேலும், மேலும் நாம் உலகத்திலிருந்து தனிமைப்படவே வழிவகுக்கும். இந்தியாவை அதிகம், அதிகம் ஈழத் தமிழர்கள் நெருங்கிச் செல்வதன் மூலம்தான், ஈழத் தமிழர் சமூகம் தன்னையொரு பாதுகாப்பான சூழலுக்குள் தக்கவைத்துக் கொள்ள முடியும்.

# காலம் கடந்தாலும் காலமறிந்த ஆறு தமிழ் கட்சிகளின் ஒருமிப்பு!

**அலசுவது இராஜதந்திரி**

ஒரு முக்கிய அரசியல் நிகழ்வாக ஆறு தமிழ் கட்சிகள் ஒருமித்து வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகள் குறித்த கூட்டமொன்றை நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் இளங் கலைஞர் மண்டபத்தில் நடத்தியிருந்தன. அச்சமயம் பலதரப்பட்ட கோணங்களிலி ருந்தும் கருத்துக்கண்ணோட்டங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.



ஆறு தமிழ் கட்சிகள் இவ்வாறு ஒரே அணியில் சேர்ந்து தமது கருத்துக்களை வெளியிட்டமை காலங்கடந்த ஒரு நிகழ்வான போதிலும், இந்த மாத இறுதிப்பகுதியில் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள 49ஆவது மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரைப் பொறுத்தவரை காலமறிந்த நிகழ்வாகவே இருக்கின்றது. இத்தகைய ஒற்றுமை முன்னரே ஏற்பட்டிருக்குமேயானால் தமிழ் அரசியல் கட்சிகள் ஆக்கபூர்வமான தீர்வுகளை எப்போதோ எட்டியிருக்க முடியும். மிதவாத கட்சிகளாக இருக்கலாம் அல்லது தீவிரவாத அமைப்புகளாக இருக்கலாம். எத்தரப்பிலும் ஒருபோதும் ஒற்றமையான போக்கு காணப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, வடக்கு - கிழக்கு மக்கள் நிறையவே விலை கொடுத்திருந்ததே வரலாறு.

தற்போது ஆயுதப் போராட்டம் முடக்கப்பட்டு பதின்மூன்றாண்டுகள் கடந்துள்ள நிலையில் ஆறு தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் குறித்து ஒற்றுமையாக தமது கருத்துகளை முன்வைத்துள்ளன. இத்தகைய ஒற்றுமையான போக்கு தமிழ் அரசியல் கோதாவில் தமிழ் கட்சிகள் ஏன் ஒருமித்து இயங்க முடியாதென்பதற்கு விடையளிப்பதாக இருக்கின்ற அதேசமயம், ஐ. நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் நெருங்கி வரும் தருணத்தில் தமிழ் அரசியல் கட்சிகளின் ஒத்திசைவான போக்கு சர்வதேச சமூகத்துக்கும் தெளிவான விளக்கங்களைப் பெறுவதற்கு ஏதுவாக இருக்குமென்றே கருதலாம்.

இலங்கை தொடர்பாக முன்னர் ஐ. நா. சபையில் கொண்டுவரப்பட்ட 46-1 தீர்மானத்தின் அமுலாக்கம் தொடர்பாக விளக்கம் கோருவதற்கு ஐ. நா. மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகள் தயாராகி வருகின்றன. இதுவிடயத்தில் தமிழ் அரசியல் கட்சிகள் நிறையவே பங்களிப்பை, வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் குறித்தும், மனிதாபிமான பிரச்னைகள் குறித்தும் நிறையவே பங்களிப்பை வழங்கமுடியும்.

இலங்கையில் எத்தகைய ஆட்சியாளர்கள் வந்தாலும் வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கு எத்தகைய தீர்வும் கிடைக்கப்போவதில்லை என்பதே தற்போது உறுதியாகியுள்ளது. இதனையே பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வட மாகாண சபை முதலமைச்சருமான சி. வி. விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஆறு கட்சிகளின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோது பாராளுமன்றத்தால் எக்காலத்திலும் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு தீர்வொன்றை தரமுடியாது என்று குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் இலங்கையின் பெரும்பான்மை பேரினவாத அரசியல்வாதிகளிடையேயும் மறுபுறத்தே வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் வாதிகளிடையேயும் ஒரு 'கயிறு இழுப்பாக' கையாளப்பட்டு வருகின்ற விடயம் வடக்கு - கிழக்கு தமிழர் அரசியல் விவகாரமே என்பது குறிப்பிடத்தக்கது. ஒருபுறம் தென்னிலங்கையின் பேரினவாத அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு எத்தகைய தீர்வுகளையும் தரப்போவதில்லை என்பது பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரன் குறிப்பிட்டிருப்பது போல உறுதியாகியுள்ள போதிலும் மறுபுறத்தே தென்னிலங்கையின் பேரினவாதிகள் மனம்போன போக்கில் வடக்கு - கிழக்கு பிரச்னையைக் கையாளுவதற்கு தமிழ் அரசியல் தரப்பில் காணப்படுகின்ற ஒற்றுமையின்மையும் ஒரு முக்கிய காரணமாக இருகின்றது.

இதேவேளை, வடக்கு - கிழக்கு தமிழர் பிரச்னை தற்போது சர்வதேச அரங்குகளையும் எட்டியுள்ள நிலையில் அரச தரப்பினர் சர்வதேச சமூகத்துக்கும் பதிலளிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். இத்தகைய பின்னணியில் நீதி அமைச்சர் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றி பேசிக்கொண்டேயிருக்க முடியாது என்று குறிப்பிட்டுள்ளார். அதேசமயம் வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் ஐ. நா தீர்மானங்களால் நல்லிணக்கம் ஏற்படாது என்று கூறியுள்ளார். இவ்விரு அமைச்சர்களும் அண்மையில் வட மாகாணத்துக்கும் விஜயம் செய்திருந்தனர்.

நீதி அமைச்சர் அலி சப்ரி, காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றி பேசிக்கொண்டிருப்பதில் எவ்வித பிரயோசனமும் இல்லை என்று குறிப்பிடுவதை நோக்கும்போது போரின் இறுதிக்கட்டத்தில் இராணுவத்தினரின் வேண்டுகோளின் பேரில் சரணடைந்தோர் பற்றி பேசுவதிலும்கூட எவ்வித அர்த்தமும் இல்லையென்றே கருத வேண்டியுள்ளது.

எனவே, அரச தரப்பின் நிலைப்பாடுகள் தெட்டத்தெளிவாகியுள்ள தருணத்தில் வடக்கே தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள ஒருமைப்பாடு வடக்கு - கிழக்கு மக்களின் விடிவை நோக்கிய பயணத்தில் மேலும் இறுக்கமடைய வேண்டியதே இன்றியமையாதாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
அதிர்ஷ்டம் வரும்போது அதைப் புரிந்துகொண்டு வரவேற்பீர்கள். தடைகளாய் இருந்த விஷயங்கள் இனி படிகளாய் மாறும். சலிப்பான தருணங்களை எளிதாக கடந்து செல்வீர்கள்.

**இடபம்**
முடிவடையாமல் இருந்த விஷயம் இன்று நல்ல படியாக முடியும். பேச்சில் கவனமாக இருந்து பிரச் னையில் இருந்து தப்புவீர்கள். பெரியோர் நலனில் அக் கறை செலுத்தி அவர்களின் ஆசியை பெறுவீர்கள்.

**மிதுனம்**
பெற்றோருக்கு விருப்பமான செயல் ஒன்றை செய்வீர்கள். கடன் பிரச்னை தீரும். நட்பு வட்டம் விரிவடையும். உங்கள் மீது அதிகப் பாசம் காட்டு பவரைப் புரிந்து கொள்வீர்கள்.

**கடகம்**
பிறர் நலனுக்காக பாடுபட்டாலும் நற்பெயர் கிடைக்க தாமதமாகும். கவனக்குறைவினால் வந்த பிரச்னை தீரும். நிம்மதியான நாள். திடீர் செலவைச் சமா ளித்து வெல்வீர்கள். தர்மம் செய்வீர்கள்.

**சிம்மம்**
நண்பர் சந்திப்பு உண்டு. மனதில் குதூகலம் நிறை யும் நாள். திறமை அதிகரிப்பதால் மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். இன்று சுபநிகழ்ச்சிகள் ஏற் பாடாகும். மனக்குழப்பம் அகலும்.

**கன்னி**
பணிபுரியும் பெண்கள் மகிழ்வார்கள். பகைவர் மனம் மாறுவர். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும். உடல்நலம் மேம்படும். இன்று தகுந்த ஓய் வெடுத்து உடல்நலத்தைச் சீராக்கிக் கொள்வீர்கள்.

**துலாம்**
பெரியோரின் மனம் மகிழும்படியான செயல்களை செய்வீர்கள். குழந்தைகளின் செயலால் ஏற்பட்ட மனஅழுத்தம் தீரும். பணியிடத்தில் நீண்ட காலம் கழித்து பாராட்டை பெறுவீர்கள்.

**விருட்சிகம்**
கூடுதல் உழைப்பால் குடும்பத்தின் பொருளாதார நிலை உயரும். வெற்றி வாய்ப்பு அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும். உங்கள் மனதில் இருக்கும் கனவு இன்று செயல் வடிவம் பெறும்.

**தனுசு**
வீண்பழி வராதவாறு கவனத்துடன் நடந்து கொள் வீர்கள். அதிர்ஷ்டம் இப்போதைக்கு இல்லை. நன் றாக உழையுங்கள். வீண்பழி ஏற்படுத்தும் சூழலுக் குள் செல்ல வேண்டாம்.

**மகரம்**
அலுவலகத் தகவலை யாரிடமும் சொல்ல வேண் டாம். பேச்சிலும், செயலிலும் கவனமாக இருக்க வேண்டிய நாள். நீங்கள் எதிர்பார்த்த தகவல்கள் சற்றுத் தாமதமாகவே வரும்.

**கும்பம்**
உங்களது பொறுப்புகளை கவனமாகச் செய்வது நல்லது. பிறரது விஷயத்தில் தலையிடாமல் இருங்கள். அதுவே உங்களை உயர்த்தும். பெரி யோருக்கான மரியாதையைக் குறைக்காதீர்கள்.

**மீனம்**
சற்று அதிகமாகப் பணிந்து போய் ஜெயிக்க வழி பார்ப்பீர்கள். பழி தரும் செயல்களைச் செய்யாமல் காத்துக்கொள்வீர்கள். வீடு வாங்க எடுத்த முயற்சி வெற்றி பெறும். உழைப்பு கூடும்.

# தி.மு.க. கோட்டையில் ஓட்டை போடும் வேலையை பா.ஜ.க. தொடங்கி விட்டது

## அண்ணாமலை பரபரப்பு பேச்சு



சென்னை, பெப். 18

'தி.மு.க. கோட்டையில் ஓட்டை போடும் வேலையை பா.ஜ.க. தொடங்கி விட்டது' என்றும், 'பொங்கல் பரிசு தொகுப்பு அவலத்தை மக்கள் மறக்கவே மாட்டார்கள்' என்றும் தேர்தல் பிரசாரத்தில் அக்கட்சியின் மாநிலத்தலைவர் கே.அண்ணாமலை பரபரப்பாக பேசியுள்ளார்.

சென்னை மாநகராட்சி தேர்தலில் போட்டியிடும் பா.ஜ.க. வேட்பாளர்களை ஆதரித்து, தீவிர தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார். தேர்தல் பிரசாரத்தின்போது அண்ணாமலை தெரிவித்தாவது:-

"ஒருபக்கம் மத்திய அரசின் பா.ஜ.க. ஆட்சி, பிரதமர் நரேந்திர மோடியின் மகத்தான மக்கள் சேவை. இன்னொரு பக்கம் தி.மு.க. அரசின் 8 மாத அவல ஆட்சி. இந்த இரண்டில் எது வேண்டும்? என்று மக்கள் சிந்தித்து பார்த்து வாக்களிக்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளில் பா.ஜ.க. அங்கீகாரம் பெற்றால் உண்மையிலேயே இந்த சென்னையை சிங்கார சென்னையாக மாற்றிக்காட்டுவோம்.

எனவே இந்தமுறை ஒரு நல்ல மாற்றத்துக்காக, எங்கள் மீது நம்பிக்கை வைத்து ஒரு வாய்ப்பு தாருங்கள். எங்கள் வேட்பாளர்களுக்கு கட்ட பஞ்சாயத்து தெரியாது.

யாரும் பெரும் பணக்காரர்களும் கிடையாது. எனவே 'தாமரை' சின்னத்தில் வாக்களியுங்கள். இந்த சென்னையின் தலையெழுத்தே மாறும்.

எத்தனை மழை வந்தாலும் சாலையில் தண்ணீர் தேக்கமில்லாத நிலைக்கு சென்னையை மாற்றுவோம்" என அவர் தெரிவித்தார்.

# உள்ளாட்சி தேர்தல் பிரச்சாரம் முடிவு

சென்னை, பெப். 18

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் பிரச்சாரம் நேற்றிரவுடன் முடிவுக்கு வந்துள்ளது. நாளை 19 ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகள் என மொத்தம் 649 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ளது.

தங்களது கட்சி வேட்பாளர்களுக்காக முதல்வர் ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள், தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். இந்தச் சூழலில் தேர்தல் நடப்பதற்கு 48 மணி நேரத்துக்கு முன்னதாக பிரச்சாரம் முடிக்கப்பட வேண்டும் என்பதால் நேற்று மாலை 6 மணிக்கு பிரச்சாரம் நிறைவடைந்தது.

நாளை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வாக்குப்பதிவு நடைபெறும் பகுதிகளில் வரும் 19ஆம் தேதி பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

# தி.மு.க.வில் இருந்து மேலும் 12 பேர் நீக்கம்

சென்னை, பெப். 18

கட்டுப்பாட்டை மீறியதாக கூறி திமுக அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து பொறுப்பில் இருந்தும் மேலும் 12 பேர் தற்காலிகமாக நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் வாக்குப்பதிவு ஒரே கட்டமாக நாளை நடைபெறவுள்ளது.

திமுக நிர்வாகிகள் அக்கட்சியில் சார்பில் போட்டியிட முடியவில்லை என்று 56 பேர் சுயட்சையாக போட்டியிடுகின்றனர். ஏற்கெனவே நிர்வாகிகள் சுயேட்சையாக போட்டியிட கூடாது என்று தி.மு.க. தலைமை எச்சரிக்கை விடுத்திருந்தது.

அதனை மீறி சுயேட்சையாக போட்டியிட்ட நபர்களை கட்சியில் இருந்து நீக்கப்படுவதாக தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவித்திருந்தார். இதனை தொடர்ந்து ஏற்கெனவே கட்டுப்பாட்டுகளை மீறி போட்டியிட்ட பலரை கட்சி அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து நீக்குவதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது கட்டுப்பாட்டை மீறியதாக கூறி திமுக அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து பொறுப்பில் இருந்தும் மேலும் 12 பேர் தற்காலிகமாக நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

# துணை இராணுவத்தை வரவழைக்க வேண்டும்

## ஜெயக்குமார்

சென்னை, பெப். 18

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலுக்கான பாதுகாப்பு பணிக்கு துணை இராணுவத்தை வரவழைக்க வேண்டும் என அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் பிரசாரத்தில் தெரிவித்துள்ளார்.

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலுக்கான பிரச்சாரத்தை அரசியல் கட்சியினர் நடத்திவருகின்றனர்.

மக்களிடம் வாக்குகளை பெற பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சென்னை ஓட்டேரியில் அதிமுக வேட்பாளர்களை ஆதரித்து ஜெயக்குமார் பிரசாரத்தில் ஈடுப்பட்டார். அப்போது பேசிய ஜெயக்குமார், "நகர்ப்புற தேர்தலில் காவல் துறை மீது நம்பிக்கை இல்லை. துணை இராணுவத்தை வரவழைக்க வேண்டும்" என தெரிவித்துள்ளார்.



## அரச ஊழியரின் கோரிக்கை அடங்கிய துண்டுப் பிரசுரம் யாழில் விநியோகம்

யாழ்ப்பாணம், பெப். 18

யாழில் அரசு ஊழியர்கள் தொடர்பான பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து துண்டுப் பிரசுர விநியோகமொன்று மேற்கொள்ளப்பட்டது.

ஒன்றிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் மத்திய நிலையம் மற்றும் தொழிலாளர் போராட்ட மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் நேற்று காலை 7:30 மணியளவில் யாழ். மாவட்ட செயலகம் முன்பாக இந்த துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் இடம்பெற்றது.

அரச ஊழியர்களின் சம்பளத்தை 15,000 ரூபாவால் அதிகரிக்குமாறும், பதவி உயர்வு முறையொன்றையும் கடமைப் பட்டியலும் அடங்கிய அபிவிருத்தி உத்தியோகத்தர் புதிய சேவைகள் யாப்பொன்றைத் தயாரிக்குமாறும், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் புதிய சேவைகள் யாப்பொன்றைத் தயாரிக்குமாறும், சகல அபிவிருத்தி உத்தியோகத்தர்களினதும் பறிக்கப்பட்ட சேவைக் காலத்தை நிரந்தர சேவையில் இணைக்குமாறும், 2016 இன் பின்பு அரச சேவைக்கு வந்த அனைவரினதும் பறிக்கப்பட்ட ஓய்வூதிய உரிமையை மீண்டும் வழங்குமாறும் கோரி இந்த துண்டுப் பிரசுர விநியோகம் முன்னெடுக்கப்பட்டது.

(அ)

## பெண்கள் கழிவறையில் கமெரா; பொலிஸ் விசாரணை ஆரம்பம்!

கொழும்பு, பெப். 18

கம்பஹா, பகுதியிலுள்ள தனியார் மேலதிக வகுப்பொன்றில் பெண்கள் கழிவறையில் நவீன கமெரா பொருத்தப்பட்ட விவகாரம் தொடர்பில் பொலிஸ் தகவல் தொழில்நுட்பப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அத்துடன், கமெரா பொருத்தப்பட்ட விவகாரம் தொடர்பில் சிறுவர் மற்றும் பெண்கள் விவகார பணியகத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டபோதிலும், நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இப்படியான செயல்பாடுகள் நீண்ட காலமாக இடம்பெற்று வந்துள்ளதாக மாணவிகள் சந்தேகம் வெளியிட்டுள்ள நிலையில், பலரும் அச்சமடைந்துள்ளனர்.

அதேவேளை, மேற்படி பயிற்சி வகுப்பின் உரிமையாளர் மற்றும் ஆசிரியர்கள் உட்பட 10 இற்கும் மேற்பட்டோரிடம் இது தொடர்பில் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.வகுப்புகளை நடத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஊடகவியலாளர்களுக்கும் இந்த அரசில் இருண்ட யுகம்!

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 18

"தற்போதைய அரசின் கீழ் ஊடகவியலாளர்களுக்கும் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் இருண்ட யுகம் ஒன்று உருவாகி வருகின்றது."

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு படுகுழிக்குள் தள்ளப்பட்டுள்ளது. அரசு தொடர்பில் விமர்சிப்பவர்களை அச்சுறுத்தும் செயல்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுதந்திர ஊடகவியலாளர் சமுதித சமரவிக்ரமவின் வீடு தாக்கப்பட்டமை, சமூக செயல்பாட்டாளரான செஹான் மாலகே கைதுசெய்யப்பட்டமை போன்றவை இருண்ட யுகத்தையே நினைவுபடுத்துகின்றது-என்றார். (அ)

# பொருளாதாரம் கடுமையாக பாதிப்பு டொலர் பெறுமதி ரூ.300 வரை உயரும்!

### ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 18

**"இலங்கையின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. டொலர் பற்றாக்குறை இன்னும் நீங்கவில்லை. ரூபாவின் பெறுமதி கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. டொலர் ஒன்று 250 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. இத்தொகை 275 ரூபாவரை உயரக்கூடும். அத்தோடு நிறுத்தவில்லையென்றால் வருட இறுதிக்குள் 300 ரூபா வரை டொலரின் பெறுமதி அதிகரிக்கக்கூடும்."**

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விசேட அறிவிப்பொன்றை விடுத்தார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் தொடர்கின் றன. டொலர் தட்டுப்பாடு மற்றும் நாணயத் தட்டுப்பாடு பிரச்னையும் தீர்க்கப்படவில்லை. இன்று ஒரு ரூபாவுக்கான சந்தைப் பெறுமதி டொலருக்கு 250 ரூபாவாக காணப்படுகின்றது. இந்த நிலைமை தொடருமாக இருந்தால் 275 ரூபாவாக அதிகரிக்கலாம்.

அப்போதும் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால், இந்த வருடம் நிறைவடைவதற்குள் ஒரு ரூபாவுக்கான டொலரின் பெறுமதி 300 ரூபாவை தாண்டும். இதனால், இன்று பாரிய பொருளாதார நெருக்கடிகளும் பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக, இன்று வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள மக்களின் எண்ணிக்கை 05 இலட்சத்தால் அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் சாத்தியக்கூறுகளும் காணப்படுகின்றன. நடுத்தர மக்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதுடன் சிரமங்களுக்கு மத்தியிலேயே வாழ்க்கையை கொண்டுச் செல்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் நடுத்தர வர்க்க மக்கள் மேலும் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

விவசாயத்துறையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. சிறிய மற்றும் சுய தொழிலாளர்கள் தங்களுக்கு தேவையான உற்பத்தி பொருட்களை பெற்



றுக்கொள்ள முடியாத இக்கட்டான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் மீண்டும் கடனை மீள செலுத்தவேண்டியுள்ளது. இந்த வருடத்துக்குள் நாங்கள் 06 பில்லியன் டொலர் கடனை மீள செலுத்த வேண்டியுள்ளது. எனினும், நாங்கள் இதுவரை சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தவில்லை. இதனால், ஜூன் மற்றும் ஜூலையில் கடனை மீள செலுத்துவதற்கு தேவையான நிதியை திரட்ட வேண்டியுள்ளது.

இதேவேளை, தற்போது அந்நிய செலாவணி கையிருப்பு குறிப்பாக, சர்வதேச கொடுக்கல் வாங்கல்கள் இன்று வங்கிகளின் ஊடாக முன்னெடுக்கப்படாது, உண்டியல் முறையில் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறு நாட்டின் பொருளாதாரத்தால் பல்வேறு பிரச்னைகள் தலைதூக்கியுள்ளன. இந்த நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் யாப்புக்கு அமைய அதன் அங்கத்துவ நாடுகளின் பொருளாதார நிலைமை குறித்த அறிக்கை அடுத்த வாரத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த அறிக்கை கிடைத்தவுடன் அதனை நாங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அது தொடர்பாக விவாதமொன்றையும் நடத்துவோம்.

இதற்கு கட்சி பேதங்கள் தேவையில்லை. இந்த நிலைமைக்கு யார் பொறுப்புக் கூற வேண்டும் என்பதை ஆராயாது, அதில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துகள் குறித்து பொதுவான இணக்கப்பாடுகளையும் முடிவுகளையும் எடுக்கவேண்டும். இளைய தலைமுறையினருக்கு நாங்கள் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். இன்று பாராளுமன்றத்தின் மீதும் அரசியல் மீது நம்பிக்கை இழந்துள்ளனர். எனவே, நாங்கள் எதிர்கால தலைமுறையினருக்கான சிறந்த அடித்தளத்தை உருவாக்குவதற்கு திட்டங்களை வகுக்கவேண்டும்-என்றார். (அ)

## பிரதமரின் செயலருக்கு கொரோனா!

கொழும்பு, பெப். 18

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் செயலாளர் அநுர திஸாநாயக்கவுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதமரின் செயலாளர் காரியாலயத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று அறிகுறிகள் தென்பட்டதால் அவர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## சர்வதேச முதலீட்டார்களை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, பெப். 18

தூதரகங்களின் ஆதரவுடன் இலங்கை அபிவிருத்தி பத்திரங்களில் முதலீடு செய்வதற்கு தகுதியான முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இவ்வருடம் இலங்கை அபிவிருத்தி பத்திர வெளியீடுகள் சிறிய மற்றும் பெரிய முதலீட்டாளர்களை ஈர்த்து 111.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஈட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

## அரசின் பங்காளிக் கட்சிகள் அவசரமாக சந்தித்து பேச்சு

கொழும்பு, பெப். 18

அரசாங்கத்தின் அங்கம் வகிக்கும் கூட்டணிக் கட்சிகளின் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் அவசர சந்திப்பொன்று அமைச்சர் விமல் வீரவன்ஸவின் இல்லத்தில் நடைபெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்த சந்திப்பில் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பாரதூரமான பிரச்னைகள் தீர்ப்பது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதனடிப்படையில், அந்த பிரச்னைகள் தொடர்பில் யோசனைகளை தயாரித்து எதிர்வரும் 2 ஆம் திகதி அரசாங்கத்திடம் கையளிக்க இந்த அணியினர் தீர்மானித்துள்ளனர் என கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக மற்றொரு சந்திப்பை அமைச்சர் விமல் வீரவன்ஸ அல்லது உதய கம்மன்பில ஆகியோரது வீட்டில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

# தமிழக முதல்வர் ஸ்டாலின் யாழ்ப்பாணம் வரவேண்டும்

## அழைக்கிறார் டக்ளஸ் தேவானந்தா

யாழ்ப்பாணம், பெப். 18

**தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினை யாழ்ப்பாணம் வருமாறு அழைப்பு விடுத்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். மயிலிட்டித் துறைமுகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.**

இந்திய மீனவர் பிரச்னைக்கு இந்திய பிரதமர் உள்ளிட்ட உயர்மட்டத்தினருடன் பேசி வருகின்றோம். இதற்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என நம்புகிறேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அத்துடன் இந்திய அரசின் உதவியுடன் வடக்கு மீனவர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. மீன்பிடித் துறைமுகங்கள் அமைந்துள்ள அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கே முன்னுரிமை வழங்க கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் தலைமையிலான கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

தமிழக முதல்வர் ஸ்டாலினை யாழ்ப்பாணத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளேன். தி.மு.க மூத்த தலைவர் டி.ஆர்.பாலு கச்சதீவு திருவிழா தொடர்பில் உரையாடிய போது இந்தக் கோரிக்கையை அவரிடம் முன்வைத்தேன்-என்றார். (அ)



# மன்னாரில் 16 நாட்களில் மட்டும் 377 கொரோனா தொற்றாளர்கள்

## வைத்தியர் விநோதன் தகவல்

மன்னார், பெப். 18

மன்னார் மாவட்டத்தில் கடந்த 16 நாட்களில் 377 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இந்த வருடம் 2022 ஆம் ஆண்டு தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் 578 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. விநோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் கடந்த புதன்கிழமை மேலும் புதிதாக 12 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் பெப்ரவரி மாதம் தற்போது வரை 377 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் மொத்தமாக 578 கொரோனா தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொரோனா தொற்றால் பெப்ரவரி மாதம் 3 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன. தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றால் 39 பேர் மரணித்துள் ளனர்.

ஒமைக்ரோன் அலை பரவல் தொடங்கியதில் இருந்து இறந்தவர்களின் எண்ணிக்கை மன்னார் மாவட்டத்தில் 3 ஆகும். ஒவ்வொரு 120 நோயாளர்களுக்கும் ஒருவர் என்ற வகையில் இறப்பு இடம்பெற்றுள்ளது.

இது டெல்டா அலை பரவும்போது ஏற்பட்ட இறப்புகளுடன் ஒப்பிடும்போது குறைவாக இருந்தாலும்,இதனை கருத்தில் கொள்ளப்படவேண்டிய ஒரு எண்ணிக்கையாக காணப்படுகின்றது.

எனவே பொது மக்கள் தமது 2 ஆவது தடுப்பூசியை பெற்றுக் கொண்ட பின்னர் மூன்று மாதங்கள் நிறைவடைந்து இருந்தால் கட்டாயமாக 3 ஆவது தடுப்பூசியை பெற்றுக் கொள்ள வேண்டும். ஏனைய சுகாதார வழி முறைகளையும் கடை பிடிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. இதுவரை மொத்த மாக 12,643 மாணவர்களுக்கு முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான 2 ஆவது தடுப்பு வழங்கும் நடவடிக்கைகள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.16 தொடக்கம் 20 வயதுடைய மாணவர்களுக்கு குறித்த 2ஆவது தடுப்பூசி வழங்கப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை மாலை வரை 799 மாணவர்கள் 2 ஆவது தடுப்பூசியை செலுத்திக் கொண்டுள்ளனர்.எதிர்வரும் புதன் கிழமைக்கு முன்னர் 2ஆவது தடுப்பூசியை முழுமையாக வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பாடசாலை தவணை ஆரம்பிக்கப்படும்போது 16 தொடக்கம் 20 வயதுடைய மாணவர்கள் அனைவரும் 2ஆவது தடுப்பூசியை பெற்றிருக்க வேண்டும் என்பது எமது நோக்கமாக உள்ளது. மேலும் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொண்ட மக்களின் சதவீதம் மன்னார் மாவட்டத்தில் 39 சதவீதமாக காணப்படுகின்றது. எதிர்வரும் நாட்களில் குறித்த தடுப்பூசியை வழங்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இது வரையில் 59.3 சதவீத மானவர்கள் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளனர். மார்ச் 1 ஆம் திகதி இடம்பெற உள்ள திருக்கேதீஸ்வர சிவராத்திரி நிகழ்வில் கலந்து கொள்ள உள்ள பக்தர்கள் முழுமையாக தடுப்பூசிகளை பெற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

2 ஆவது தடுப்பூசி பெற்றிருந்து 3 மாதங்கள் நிறைவடைந்திருந்தால் 3 ஆவது தடுப்பூசி பெற்றிருக்கவேண்டும்.

இவர்கள் மாத்திரமே திருக்கேதீஸ்வர சிவராத்திரி நிகழ்வில் கலந்து கொள்ள முடியும். எனவே திருவிழாவில் கலந்து கொள்ள எதிர் பார்த்துள்ள பக்தர்கள் தமது 3 ஆவது அல்லது பூஸ்டர் தடுப்பூசியை பெற்று 2 வாரங்கள் நிறை வடைந்துள்ளதை உறுதி செய்து கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தவறாக பயன்படுத்தவேண்டாம்

## பொலிஸாருக்கு ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, பெப். 18

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தவறாகப் பயன்படுத்த வேண்டாம் என்றும் பயங்கரவாதத்துடன் தெளிவான தொடர்புகள் இருந்தால் மாத்திரம் பயன்படுத்துமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்தார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் விசாரணைகளை கைவிடுவதற்கு பயங்கரவாத தடைச்சட்டத்தை தவறாக பயன்படுத்தவேண்டாம் என ஜனாதிபதி பொலிஸாரிடம் கூறியதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாக பொறுப்பற்ற பயன்பாடு நிறுத்தப்பட வேண்டும் என்று அரசாங்கம் தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகவும் அது நடக்கிறதா இல்லையா என்று ஒரு வாய்ப்பு கொடுத்துப் பார்ப்போம் என்றும் வெளிவிவகார அமைச்சர் கூறினார்.

வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற உள்ளூர் சிவில் சமூகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் பீரிஸ் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

இதன்போது, சிவில் சமூகம் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் பொலிஸார் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவது குறித்து வலுவான எதிர்ப்புகளை வெளிப்படுத்தினர்.

அத்தோடு, பயங்கரவாத தடைச் சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்களை வெளிவிவகார அமைச்சர் வலுவாக ஆதரித்தார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தங்கள் ஒன்றும் புதிதல்ல என்று சிலர் எடுத்துள்ள நிலைப்பாட்டை அவர் நிராகரித்தார்.

சட்டமா அதிபர் ஹெஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவிக்காதபோதிலும், சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை விடுதலை செய்வதற்கான முயற்சிகளை பயங்கரவாதத் தடைச் சட்டம் தடுத்ததாக ஜி.எல்.பீரிஸ் கூறினார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஹிஸ்புல்லாவுக்கு பிணை வழங்குவதற்கு சட்டத்தரணிகள் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# மருந்து வகைகள், மருத்துவ உபகரணங்களை இந்தியா, சீனாவில் இருந்து பெற நடவடிக்கை

கொழும்பு, பெப். 18

நாட்டில் அடுத்த இரண்டு காலாண்டுகளுக்கு தேவையான மருந்து வகைகள் மற்றும் அத்தியாவசிய மருத்துவ உபகரண பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்பதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இந்தியாவினால் நன்கொடையாக 100,000 அன்ரிஜென் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

110 மில்லியன் ரூபா பெறுமதியான அன்ரிஜென் உபகரணங்கள் இவ்வாறு இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் இதனை கையளித்தார்.

தட்டுப்பாடின்றி மருந்துகளை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக இந்தியாவிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்புக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். அடுத்த இரண்டு காலாண்டுகளுக்கு தேவையான மருந்து வகைகள் மற்றும் அத்தியாவசிய மருத்துவ உபகரணப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

குறிப்பாக நாட்டு மக்களுக்கு தேவையான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை எவ்வித தட்டுப்பாடுமின்றி வழங்க எதிர்பார்த்துள்ளதோடு, இதற்காக அரசாங்கம் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அவர் கூறினார். (அ)

# பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக நெல்லியடியில் கையெழுத்து போராட்டம்



யாழ்ப்பாணம், பெப். 18

பயங்கரவாத தடைச் சட்டத் துக்கு எதிராக கையெழுத்து திரட் டும் நடவடிக்கை நேற்று யாழ்ப் பாணம் நெல்லியடியில் முன்னெ டுக்கப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சி யின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட் டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நெல்லியடி பஸ் நிலையத் துக்கு முன்பாக நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்ற கையெழுத்துப் போராட்டத்தில் பலர் கலந்து கொண்டு கையெழுத்துக் களை பதிவு செய்திருந்தனர். (அ-03)

# பெரமுனவுடன் இணையுங்கள் அமைப்பாளர் பதவி தருகிறேன்

## வாசுவுக்கு அழைப்பு விடுத்தார் பஸில்



கொழும்பு, பெப். 18

**"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணையுங்கள். தொகுதி அமைப்பாளர் பதவியை தருகின்றேன்."**

**- இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார வுக்கு அழைப்பு விடுத்துள்ளார் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.**

ஆளுங்கட்சி குழுக்கூட்டத்தின்போது,

"இரத்தினபுரி மாவட்டத்தில், எனது தொகுதியில் எனக்குத் தேவையான ஒரு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை நியமிக்கமுடியாத நிலை காணப்படுகின்றது. " என்று வாசுதேவ நாணயக்கார சுட்டிக் காட்டினார். அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியும் இந்த கருத்தை ஆமோதித்தார்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் சரத் வீரசேகர, நியமனம் என்பது முறையாக நடக்கவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

"தமக்கு தேவையான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒருவரை நியமித்துக் கொள்வது வழமை. அது எந்த ஆட்சியாக இருந்தாலும் அப்படிதான் நடக்கும்." என பஸில் அவ்வேளை குறிப்பிட்டார். பஸிலின் கருத்துடன் பிரதமரும் உடன்பட்டார்.

இவ்வேளையிலேயே, அமைச்சர் வாசு, நீங்கள் எங்கள் பக்கம் வாருங்கள். உங்களுக்கு தொகுதி அமைப்பாளர் பதவியைத் தருகின்றேன் என பஸில் சிரித்தப்படி கூறியுள்ளார். (அ)

# கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பூஸ்டர் வழங்க நடவடிக்கை

கொழும்பு, பெப். 18

கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் பூஸ்டர் தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியர் பிரியங்கர ஜயவர்த்தன தெரிவித்தார்.

பூஸ்டர் தடுப்பூசியை பெறுவதன் ஊடாக கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பிறக்கவிருக்கும் குழந்தைக்கும் பாதுகாப்பு கிடைக்கும் என அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தியர் பிரியங்கர ஜயவர்தன இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

இதேவேளை, பூஸ்டர் தடுப்பூசி தொடர்பில் சமூகத்தில் பரவியுள்ள தவறான கருத்துக்கள் குறித்தும் வைத்தியர் பிரியங்கர ஜயவர்தன கருத்து தெரிவித்தார். (அ)

# டுபாய் சென்றார் பந்துல

கொழும்பு, பெப். 18

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன டுபாய் நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். நேற்று முன்தினம் அவர் அங்கு புறப்பட்டுச் சென்றார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் வர்த்தகத் தொடர்புகளை வலுப்படுத்துவது இந்த விஜயத்தின் நோக்கம் என தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன, ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தின் சர்வதேச வர்த்தக அமைச்சர் கலாநிதி தானி பின் அஹமத் அல் செய்த்தியை சந்திக்க உள்ளார்.

அத்துடன் டுபாய் கண்காட்சி மத்திய நிலையத்தில் நேற்று முதல் 19 ஆம் திகதி வரை நடைபெறும் இலங்கை ஏற்றுமதி சம்பந்தமான கண்காட்சியை அமைச்சர் பந்துல குணவர்தன ஆரம்பித்து வைத்தார்.

இதனை தவிர டுபாய் ஏக்ஸ்போ கண்காட்சியையும் அமைச்சர் பார்வையிடவுள்ளார். (அ)

# மின்சாரக் கட்டணத்தை செலுத்த தவறியோருக்கு 3 மாத அவகாசம்

கொழும்பு, பெப். 18

மின்சார கட்டணத்தை செலுத்தத் தவறியுள்ள நுகர்வோருக்கு, எஞ்சியுள்ள கட்டணத்தை செலுத்துவதற்காக 03 மாத கால அவகாசத்தை வழங்குவதற்கான கட்டளை நேற்று வியாழக்கிழமை பிறப்பிக்கப்பட்டது.

அதற்கமைய 03 மாதங்களுக்குள் தாமதக் கொடுப்பனவை செலுத்த தவறும் மின் பாவனையாளர்களுக்கான மின்சார விநியோகம் துண்டிக்கப்படும் என இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் 03 மாதங்களுக்கு மின்வெட்டை அமுல்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபையினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்த பொது பயன்பாடுகள் ஆணைக்குழு, மாற்று நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வரலாற்றில் மிகப் பெரிய அளவில் எரிபொருள்களின் விலை உயரும்

## அமைச்சர் உதய கம்மன்பில கூறுகிறார்



கொழும்பு, பெப். 18

இம்முறை எரிபொருள் விலைகளை அதிகரித்தால், அது இலங்கை வரலாற்றில் மிகப் பெரிய எரிபொருள் விலை அதிகரிப்பாக இருக்கும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இப்படியான விலை அதிகரிப்பை கோரியுள்ளது எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலக சந்தையில் எரிபொருளின் விலை வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது.

நாளுக்கு நாள் நட்டமடையும் நிறுவனமாக தொடர்ந்தும் இயங்க முடியாது என்பதால், மிகப் பெரிய அளவில் எரிபொருள் விலைகளை அதிகரிக்க வேண்டும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிசக்தி அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

ஒரு லீற்றர் பெற்றோலின் விலையை 192 ரூபாய் வரையும் டீசலின் விலையை 169 ரூபாய் வரையும் கட்டாயம் அதிகரிக்க வேண்டும் என கூட்டுத்தாபனம் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் இம்முறை எரிபொருள் விலைகளை அதிகரிக்க அனுமதி வழங்கப்படவில்லை என்றால், பொது போக்குவரத்து, முப்படைகள், பொலிஸ் உட்பட அத்தியவசிய சேவைகளுக்கு மாத்திரம் எரிபொருளை விநியோகிப்பது என தீர்மானிக்க நேரிடும் எனவும் கூட்டுத்தாபனம் கூறியுள்ளது - என்றார். (அ)







# யாழ். பல்கலை பௌதிகவியல்துறை மாணவர்களின் ஆய்வு மாநாடு நேற்று

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல்துறை மாணவர்களின் பௌதிக மாணவர் ஆய்வு மாநாடு இன்று 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசியர் சி. சிறிசற்குணராஜா முதன்மை விருந்தினராகவும், முன்னாள் துணைவேந்தரும், வாழ்நாள் பேராசிரியருமான பேராசிரியர் க. கந்தசாமி சிறப்பு விருந்தினராகவும், விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பி. ரவிராஜன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வு மாநாட்டில் 18 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. (அ-03)

# வேகமெடுக்கும் ஒமைக்ரோன்!



கொழும்பு, பெப். 18

எவ்வித நோய் அறிகுறிகளும் இல்லாத ஒமைக்ரோன் தொற்றாளர்களிடமிருந்து வைரஸ் பரவும் வேகம் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதன் காரணமாக கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இதேவேளை, இயல்பாகவே ஒமைக்ரோன் பிறழ்வுக்கான பல அறிகுறிகள் தென்படாது என்பதை சுட்டிக்காட்டிய விசேட வைத்திய நிபுணர், நோய் அறிகுறிகள் தென்படாத காரணத்தினால் அன்ரிஜென் அல்லது பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ளாத குறிப்பிட்ட சதவீத கொரோனா தொற்றாளர்கள் சமூகத்தில் இருப்பதால் மேலும் தொற்று பரவலாம் எனவும் கூறினார். (அ)

# மின்சார சபைக்கு தடையற்ற எரிபொருள் ஜனாதிபதி உத்தரவு பிறப்பிக்கவேண்டும்

## தொழிற்சங்கங்கள் கோரிக்கை

கொழும்பு, பெப். 18

தடையில்லா மின்சாரத்தை வழங்குவதற்கு தேவையான எரிபொருளை வழங்குமாறு எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

தொழிற்சங்கவாதியான ஆனந்த பாலித, அரச தலைவர் தலையிட்டு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் உட்பட சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதை உறுதி செய்யவேண்டும் என வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சப்புகஸ்கந்த மற்றும் யுகதனவி மின் உற்பத்தி நிலையங்களுக்கு எரிபொருள் முழுமையாக இல்லாத நிலையில் நாட்டில் எரிபொருள் இருப்புப் பற்றாக்குறை நிலவுகிறது.

தற்போது எரிபொருள் இறக்குமதி செய்யப்படாமல் பொதுமக்கள் ஏமாற்றப்படுகின்றனர்.

இலங்கை மின்சார சபைக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஊடாக எரிபொருளை வழங்குவதற்கு முன்னாள் நிர்வாகங்கள் மறுக்கவில்லை.

மின்சாரத்தை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்திய ஜனாதிபதி விசேட வர்த்தமானி அறிவித்தலை விடுத்துள்ளார். வேலைநிறுத்தத்தை நசுக்குவதற்காக மாத்திரம் அதனை அத்தியாவசிய சேவையாக மாற்றக் கூடாது.

வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு தடையில்லா மின்சாரம் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் இது அத்தியாவசிய சேவையாக மாற்றப்படவேண்டும் - என்றார். (அ)

# காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் ஜெனீவாவில் நெருக்கடி கொடுக்குமா?

**காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் பிள்ளைகள் உயிருடன் இல்லை என்பதை, உறவினர்களின் முகங்களை பார்த்து எவ்வாறு கூறுவது என குறிப்பிடும் நீதி அமைச்சர் அலி சப்ரி, ஆணைக்குழுவின் அறிக்கையில் இந்த விடயங்கள் வரும் வரை மௌனமாகவே இருக்க வேண்டியுள்ளதாகவும் கூறுகின்றார்.**

ரஞ்சன் அருணன்பிரசாத்




“உங்களின் பிள்ளைகள் இப்போது உயிருடன் இல்லை என்பதை அவர்களின் முகத்தை பார்த்து எவ்வாறு கூறுவது?” என இலங்கை நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

யுத்த காலப் பகுதியில் வலிந்து காணாமல் போனோர் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ முகாம்களில் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை கூற வேண்டியது உங்களின் கடமையல்லா? என எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

பாதுகாப்பு படைகளிலேயே நான்காயிரத்திற்கு அதிகமான பேர் காணாமல் போயுள்ளனர் என்றால், அதனை விடவும் அதிகமான நபர்கள் விடுதலைப் புலிகள் பக்கத்திலும் காணாமல் ஆக்கப்பட்டிருப்பார்கள் என்பதே உண்மை என அலி சப்ரி கூறுகின்றார்.

விடுதலைப் புலிகள் அமைப்பினால் வலுக்கட்டாயமாக அழைத்து செல்லப்பட்ட பலர் உள்ளமையினால், அவர்கள் யுத்த காலத்தில் உயிரிழந்திருக்கக்கூடும் என அவர் குறிப்பிடுகின்றார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் பிள்ளைகள் உயிருடன் இல்லை என்பதை, உறவினர்களின் முகங்களை பார்த்து எவ்வாறு கூறுவது என குறிப்பிட்ட அவர், ஆணைக்குழுவின் அறிக்கையில் இந்த விடயங்கள் வரும் வரை மௌனமாகவே இருக்க வேண்டியுள்ளதாகவும் கூறுகின்றார்.

அத்துடன், பாதுகாப்பு படைகளைச் சேர்ந்த 4000திற்கும் அதிகமானோர் காணாமல் போயுள்ளனர். அதைவிடவும் அதிகமான அளவு விடுதலை புலி அமைப்பிலிருந்த பலர் காணாமல் போயிருக்கலாம்.

விடுதலைப் புலிகளுடன் அதிகளவிலான பொதுமக்கள் பயணித்துள்ளமையினால், அவ்வாறானவர்களே அதிகளவில் காணாமல் போயுள்ளனர்.

காணாமல் போனதாக கூறப்படும் முறைப்பாடுகளில் 99.9 வீத முறைப்பாடுகள் 2009ஆம் ஆண்டுக்கு முன்னரே பதிவாகியுள்ளன. 2009ஆம் ஆண்டின் பின்னர் மிகக் குறைவான முறைப்பாடுகளே கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த பிரச்னையை வைத்து அர சியல் செய்து தமிழ் மக்களை மீண்டும் மீண்டும் ஆயுதத்தின் பக்கம் தள்ள வேண்டாம் என அவர் கோரிக்கை விடுக்கின்றார்.

இராணுவத்தை போர் குற்றவாளிகள் என கூறுவதை சிங்கள தரப்பு ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. எம்மை பொறுத்தவரை இந்த காயத்தை சுகப்படுத்த வேண்டும். ஏற்பட்ட காயத்தை மேலும் மேலும் பெரிதாக்க வேண்டாம் என நினைக்கின்றோம்” என்கிறார் நீதி அமைச்சர் அலி சப்ரி.

யுத்த காலப் பகுதியில் பலர் உயிரிழந்திருக்கக்கூடும் என கூறிய அவர், அவர்களின் உயிரை மீண்டும் தாருங்கள் என கேட்டால், எவ்வாறு கொடுக்க முடியும் என கேள்வி எழுப்பியுள்ளார். இந்த பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்பது தமது எதிர்பார்ப்பு என அவர் குறிப்பிடுகின்றார்.

“காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களா, அல்லது பொதுமக்களா, எங்கே காணாமல் போனார்கள், இப்போது வேறு நாடுகளில் உள்ளார்களா அல்லது நீங்கள் கூறுவதை போன்று சரணடைந்த நபர்களை இராணுவம் வேறு எங்கேனும் கடத்தி சென்றதா என்ற சகல விடயங்களையும் ஆராய்வோம். இதில் தவறுகள் இடம்பெற்றுள்ளது என்றால், அது அரச தரப்பில் இருந்து இடம்பெற்றிருந்தால் அவர்களுக்கு எதிராகவும் உள்ளக பொறிமுறையில் விசாரணைகளை நடத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க தயாராக உள்ளோம்” என நீதி அமைச்சர் அலி சப்ரி கூறுகின்றார்.

### ஜெனீவா மனித உரிமை அமர்வு?

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் அமர்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி ஜெனீவாவிற்கு ஆரம்பமாகவுள்ளது.

யுத்தம் நிறைவடைந்து 13 வருடங்களாகின்ற நிலையில், இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் யுத்தம் மற்றும் அதற்கு பின்னரான செயற்பாடுகள் குறித்து, மனித உரிமை பேரவையில் பல்வேறு அறிக்கையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கடந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையின் முன்னேற்றத்தை இலங்கை அரசாங்கம் இந்த ஆண்டு காண்பிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இவ்வாறான நிலையில், இலங்கை அரசாங்கம் அதற்கான தயார்ப்படுத்தல்களை முன்னெடுத்து வருவதாக அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக சுமார் 43 வருடங்களின் பின்னர், இலங்கையில் அமலில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் கால எல்லையை குறைத்தல் உள்ளிட்ட மேலும் சில விடயங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

யுத்த காலப் பகுதியில் வலிந்து காணாமல் போன மற்றும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் தற்போது உயிருடன் இல்லை என்றால், அவர்க ளின் உயிர் எவ்வாறு பறிக்கப்பட்டது என்பது குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.கஜேந்திரன் தெரிவிக்கின்றார்.



நீதி அமைச்சர் அலி சப்ரியின் கருத்து தொடர்பில் வினவிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

“இராணுவத்தினால் கைது செய்யப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்கள், இறுதிக் கட்ட போரின் போது, இராணுவத்திடம் உறவினர்களினால் ஒப்படைக்கப்பட்டவர்கள், இராணுவத்திடம் சரணடைந்தவர்கள் மற்றும் இராணுவ துணைக்குழுக்களினால் கடத்தப்பட்டவர்கள் உயிரோடு இல்லை என்று சொன்னால், அவர்களின் உயிர் எவ்வாறு பறிக்கப்பட்டது. அவ்வாறு உயிர்கள் பறிக்கப்பட்டமைக்கான காரணமானவர்கள் யார்? என்பன கண்டறியப்பட்டு, அவர்கள் சர்வதேச சட்டங்களின் படி தண்டிக்கப்பட வேண்டும்” என எஸ்.கஜேந்திரன் தெரிவிக்கின்றார்.

### காணாமல் போனோரின் உறவுகளின் பதில்

யுத்தம் முடிவடைந்ததன் பின்னரான காலத்தில் காணாமல் போனோரையே தாம் தேடி வருவதாக வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கம் தெரிவிக்கின்றது. அந்த சங்கத்தின் செயலாளர் லீலா தேவி ஆனந்தன் நடராஜன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பக்கத்தில் உயிரிழந்த அனைவருக்கும் மாவீரர்கள் என்ற கௌரவத்தை வழங்கி, உயிரிழந்தோரின் உறவினர்களுக்கு அது குறித்து அவர்கள் அறிவித்துள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

“யுத்தம் நடந்த காலக் கட்டத்தில் செஞ்சிலுவை சங்கம் மூலம் இராணுவத்தினரின் உடல்களை கொடுக்கும் போது, அவர்கள் அதனை பாரமெடுக்க மறுத்து, சந்திரன் பூங்காவில் 800 சடலங்கள் காணப்பட்டன. இதை எங்கடை ஆட்கள் அவர்களுக்குரிய மரியாதையோடு சடலங்களை அழித்து அவர்களை அடக்கம் செய்தவர். அதேபோன்று, வவுனியாவிலும் அப்படியாக சம்பவங்கள் நடந்தது. அது தான் அவர் சொன்ன அந்த காணாமல் போன ஆட்கள். விடுதலைப் புலிகளில் உயிரிழந்தவர்களுக்கு உரிய மரியாதை கொடுக்கப்பட்டு, அவர்கள் மாவீரர் பட்டியலுக்குள் சேர்க்கப்பட்டார்கள். இராணுவத்தினர் காணாமல் போகயில்ல. அவர்கள் இறந்து விட்டார்கள். யுத்தத்தில இறந்த ஆட்களை நாங்கள் கேட்கயில்ல. யுத்தம் முடிவடைந்த பிற்பாடு, இவர்கள் தந்த வாக்குறுதியை நம்பி கொண்டு போய் கையளித்த ஆட்களை தான் நாங்கள் கேட்கின்றோம்” என அவர் குறிப்பிடுகின்றார்.

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பு

“தீ கோழி, யாரையும் கண்டால், தனது தலையை மட்டும் மண்ணுக்குள் ஒழிக்குமாம். உடம்பை வெளியில் காட்டி நிற்குமாம்” இது போன்றே, நீதி அமைச்சரின் கருத்து காணப்படுகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் தெரிவிக்கின்றார். தீ கோழியை போன்று தலையை மட்டும் மறைக்க நீதி அமைச்சர் முயற்சிக்கின்றார் என அவர் கூறுகின்றார்.

இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டமைக்கான நேரடி சாட்சியங்கள் தம்மிடம் உள்ளதாக கூறிய அவர், இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் எவ்வாறு உயிரிழந்தார்கள் என்பதனை வெளிகொணர வேண்டும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்றால், சரணடைந்தவர்கள் எவ்வாறு கொலை செய்யப்பட்டார்கள் என்பதை கூற வேண்டும் என அவர் கூறுகின்றார்.

“அரசாங்கம் வெளிப்படையாக சொல்ல வேண்டும், எங்கள்கிட்ட இத்தனை பேர் சரணடைந்தவர்கள். அவ்வளவு பேரையும் நாங்கள் கொலை செய்து போட்டோம். கொலை செய்தால் அதற்கு என்ன நியாயம்?. அப்படியென்றால், இது ஒரு பெரிய இனப்படுகொலை தானே?. உங்களிடம் சரணடைந்தவர்களை நீங்கள் கொலை செய்திருந்தால், இராணுவம் கொண்டு போய் கொலை செய்திருந்தால், அதுவொரு பாரிய இனப்படுகொலை. அந்த இனப்படுகொலைக்கான நியாயம் என்ன?. அதை உள்நாட்டில் தீர்க்க இயலுமா? சாத்தியமா?” என எஸ்.ஶ்ரீதரன் கேள்வி எழுப்புகின்றார்.

இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அரசாங்கம் வெளிப்படையாக கூற வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் தெரிவிக்கின்றார். “உங்களின் பிள்ளைகள் இப்போது உயிருடன் இல்லை என்பதை அவர்களின் முகத்தை பார்த்து எவ்வாறு கூறுவது?” என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். ■

# உக்ரைன் விவகாரத்தில் ஜெர்மனியின் நிலைப்பாடு ஏன் முக்கியமானது?

எல்லைப் பகுதியில் உள்ள சில துருப்புகளை திரும்பப் பெறுவதாக ரஷ்யா அறிவித்துள்ள நிலையில் உக்ரைன் விவகாரம் திசை மாறியுள்ளது. ஆனாலும் பதட்டமான சூழல் அப்படியே நிழவுகிறது.

"நார்ட் ஸ்ட்ரீம் 2" என்பது ரஷ்யாவில் இருந்து ஜெர்மனிக்கு கடலுக்கு அடியே எரிவாயு குழாய் அமைக்கும் திட்டம் என்றாலும் சர்வதேச அளவில் அது புவிசார் அரசியல் ஆயுதமாக பார்க்கப்படுகிறது.

உக்ரைன் வழியாக செல்லும் இந்த எரிவாயு குழாய் திட்டத்திற்கு எதிரான நிலைப்பாட்டை அந்நாடு எடுத்திருப்பது மட்டுமின்றி ரஷ்யாவின் எரிவாயு ஏற்றுமதிக்கான போக்குவரத்து கட்டணத்தையும் மறுத்துள்ளது.

மேலும் ரஷ்யா தன்னுடைய சொந்த எரிவாயு ஏற்றுமதியை, மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு பாதிப்பில்லாமல், உக்ரைனுக்கு மட்டும் விநியோகத்தை நிறுத்தலாம் என்ற அச்சத்திலும் உக்ரைன் ஆழ்ந்துள்ளது. ஐரோப்பாவிற்கான எரிவாயு விநியோகத்தில் ரஷ்யா மேலாதிக்கம் செலுத்துவதோடு மற்ற நாடுகளின் மீது செல்வாக்கையும் இதன் மூலம் அதிகரித்துக் கொள்ள இயலும். ரஷ்யாவும் ஜெர்மனியும் ஒன்றிணைவது மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு பழைய அச்சத்தை மீண்டும் ஏற்படுத்தியுள்ளது.

ஐரோப்பிய யூனியன் உறுப்பு நாடுகள், தங்கள் நாட்டு கடல் வளத்தில் ரஷ்யாவின் இருப்பு குறித்து அச்சம் அடைந்துள்ள நிலையில், பின்லாந்து, சுவீடன் மற்றும் போலாந்து வழியாக ஜெர்மனியை அடையும் 1,222 கி.மீ பைப்லைன் திட்டத்தில் இருந்து பாதுகாப்பு தேவை என்பதை உணர்ந்துள்ளனர்.

**அமெரிக்காவின் கவலை**

இந்த எரிவாயு குழாய் திட்டம் என்பது ஐரோப்பா முழுவதும் ரஷ்யாவின் செல்வாக்கை அதிகரிக்கும் என்று அமெரிக்கா நம்புகிறது. இது ரஷ்யாவின் உக்ரைன் படையெடுப்பு அச்சத்தை அதிகரிக்கிறது. மேலும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினைக் கட்டுப்படுத்தும் அமெரிக்க முயற்சிகளை தடுக்கிறது என்ற கவலையில் அமெரிக்கா உள்ளது.

அமெரிக்கா ஆரம்பத்தில் இருந்தே இந்த எரிவாயு குழாய் திட்டத்தை எதிர்த்து வருகிறது. அலெக்ஸி நவல்னி விவகாரத்தில் மாஸ்கோ-பெர்லின் உறவுகளில் விரிசல் இருந்தபோதிலும், ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் மீதான தாக்குதலுக்கு க்ரெம்லினை மார்க்கெல் கடுமையாக சாடிய போதிலும், ஏஞ்சலா மார்க்கெல் தலைமையில் செயல்பட்ட அன்றைய ஜெர்மன் அரசு இந்த திட்டத்தை செயல்படுத்துவதில் அதிக அக்கறை காட்டியது. 11 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான இந்த எரிவாயு குழாய் திட்டம் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டது. ஆனாலும் செயல்பாட்டிற்கு வர ஜெர்மன் அரசு இன்னும் அதிகாரப்பூர்வ உத்தரவு பிறப்பிக்கவில்லை.

உக்ரைன் விவகாரம் விஷ்வரூபம் எடுப்பதற்கு முன்பே பொருளாதார தடையை விதித்தது அமெரிக்கா. ஆனால் இராஜதந்திர வாய்ப்புகளை வழங்கும் நோக்கில் பைடன் தலைமையிலான அமெரிக்க அரசு மே மாதம் 2021ஆம் ஆண்டு, இந்த திட்டத்தையே கேள்விக்குள்ளாக்கியிருக்கும் இரண்டு முக்கிய தடைகளை திரும்பப்பெற்றது.



**சர்வதேச அளவில் புவிசார் அரசியல் ஆயுதமாக பார்க்கப்படும் ரஷ்யாவில் இருந்து ஜெர்மனிக்கு கடலுக்கு அடியே எரிவாயு குழாய் அமைக்கும் திட்டம். உக்ரைன் விவகாரத்தில் இதனுடைய முக்கியத்துவம் என்ன?**

**நிருபமா சுப்பிரமணியன்**

2021ஆம் ஆண்டு ஜூலை மாதம், ரஷ்யா எக்காரணம் கொண்டும் இந்த எரிவாயு குழாய் திட்டத்தை உக்ரைனுக்கு எதிரான ஆயுதமாக மாற்றக் கூடாது என்று ஜோ பைடன் மெர்க்கலுடன் ஒரு சந்திப்பில் பேசினார். இந்த திட்டம் எதை உள்ளடக்கியது என்பது குறித்து வெவ்வேறு மதிப்பீடுகளுக்கு இருநாடுகளும் வந்துள்ளோம் என்று மெர்க்கல் பதில் உரைத்தார்.

இந்த எரிவாயு குழாய் திட்டத்திற்கு ஆதரவு அளித்த ஜெர்மனி மற்றும் இதர ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், அஸ்த்திரியா, மற்றும் நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகள் மீதான அமெரிக்காவின் பொருளாதார தடைகளால் ஏற்பட இருந்த அட்லாண்டிக் கூட்டணி முறிவை இரண்டு தலைவர்களும் தடுத்து விட்டதாக கருதினார்கள். ஆனால் இது அமெரிக்காவின் சரணாகதி என்றும் சிலர் நம்பினர்.

கடந்த சில வாரங்களாக பைடன் மற்றும் அமெரிக்க அதிகாரிகள் பலரும், ரஷ்யா உக்ரைன் மீது போர் தொடுத்தால் நார்ட் ஸ்ட்ரீம் திட்டம் தான் முதலில் தாக்குதலுக்கு ஆளாகும் என்று கூறி வருகின்றனர்.

ஜெர்மனியின் ஜனாதிபதி ஓலாஃப் ஸ்கோல்ஸூடன் கூட்டாக செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அமெரிக்க ஜனாதிபதி பைடன், ரஷ்யாவின் துருப்புகள் அல்லது தாங்கிகள் உக்ரைனின் எல்லைக்குள் மீண்டும் ஒரு முறை நுழைந்தால், நார்ட் ஸ்ட்ரீம் என்ற ஒன்றே இருக்காது என்று எச்சரித்துள்ளார். "இதனை நாங்கள் முடிவுக்கு கொண்டு வருவோம்" என்றும் நேரடியாக எச்சரிக்கை விடுத்துள்ளார் பைடன்.

ரஷ்யாவும் ஜெர்மனியும் பொருளாதாரக் கூட்டாண்மையில் ஒன்றிணைவதை ஐரோப்பாவில் பாதுகாபபிற்கு உத்தரவாதம் அளிப்பதில் அதன் பங்கை மேம்படுத்துவதற்கான முன்னோடியாக அமைந்ததை கண்ட அமெரிக்கா தற்போது நார்ட் ஸ்ட்ரீம் திட்டம் இரண்டாம் உலகப்போர் மற்றும் பனிப் போருக்கு இடையே நிலவிய சூழலுக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளது என்றும் அமெரிக்கா கருதுகிறது.

**ஸ்கோல்ஸின் நடவடிக்கை**

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் கெய்வ் மற்றும் மொஸ்கோ இடையே தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியதோடு, பதட்டத்தை தணிய வைக்க தேவையான முயற்சிகளை மேற்கொண்ட போதும், உக்ரைன் விவகாரத்தில் மௌனம் காத்துவரும் ஜெர்மனியின் நிலைப்பாட்டால் உள்நாடு மற்றும் உலக நாடுகளில் இருந்து விமர்சனத்தை சந்தித்து வரும் சூழலில் ஜெர்மன் நாட்டு ஜனாதிபதி ஸ்கோல்ஸ் அமெரிக்காவிற்கு அரசுப் பயணம் மேற்கொண்டார். அப்போது முதன் முறையாக நேட்டோ கூட்டணியில் இருந்து ஒரு போதும் விலக மாட்டோம் என்று அவர் உறுதி அளித்துள்ளார்.

நாங்கள் ஒரே குரலாக செயல்படுகின்றோம். ரஷ்யா உக்ரைனுக்கு எதிராக இராணுவ படையெடுப்பை முன்னெடுத்தால் அதன் பின்னர் கடுமையான விளைவுகளை அந்நாடு சந்திக்கும் என்று கூறினார். அதே சமயத்தில் தன்னுடைய பயணத்தின் போது நார்ட் ஸ்ட்ரீம் குறித்து ஒரு வார்த்தை கூட அவர் பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மக்ரோனைப் போன்றே ஸ்கோல்ஸூம் உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார், மேலும் புட்டினுடன் பேச்சுவார்த்தை நடத்த அடுத்த முயற்சி மேற்கொண்டார். தங்களின் நிலைப்பாடு மற்றும் கோரிக்கைகள் வெவ்வேறாக இருந்தாலும், அவர்கள் இருவரும் சந்தித்த அதே நாளில் ரஷ்யா உக்ரைனில் நிறுத்தப்பட்டிருக்கும் அந்நாட்டு துருப்புகளை பாதியாக திரும்பப் பெறுவதாக அறிவித்தார். ஆனால் இந்த அறிவிப்பிற்கும் ஜெர்மனி ஜனாதிபதியின் சந்திப்பிற்கும் ஏதேனும் தொடர்பு இருக்கிறதா என்பது இன்னும் தெளிவாகவில்லை. ஆனால் அது ஐரோப்பாவின் தலைவராக அவரது பிம்பத்தைக் காப்பாற்ற உதவியது.

ஒபாமா, ட்ரம்ப் மற்றும் பைடன் என்று தொடர்ச்சியாக அமெரிக்க நிர்வாகம் இந்த பைப்லைன் திட்டத்திற்கு தங்களின் எதிர்ப்புகளை பதிவு செய்து வந்தனர். ஒரு மோதல் தொடர்பான விவாதம் தலையெடுக்கும் போதெல்லாம் அமெரிக்கா, "இது வெறும் எண்ணெய்க்கான, அல்லது எரிவாயு, சம்பந்தப்பட்ட விஷயம் தானா?" என்ற பழையை கேள்வியை புதுப்பித்துக் கொண்டே இருக்கிறது.

ஐரோப்பிய ஒன்றியம் தன்னுடைய எரிவாயு தேவையில் 5%க்கும் குறைவான தேவையை அமெரிக்காவிடம் இருந்து பெற்றுக் கொள்கிறது. ரஷ்யா 41%, நார்வே 16%, அல்ஜீரியா 7.6% மற்றும் கத்தார் 5.2% - ஐரோப்பிய ஒன்றியத்திற்கு எரிவாயு விநியோகிக்கும் நான்கு முன்னணி நாடுகள். ஆனால் கடந்த தசாப்தத்தின் நடுப்பகுதியில் இருந்து எல்என்ஜியின் நிகர ஏற்றுமதியாளராக, அமெரிக்கா தனது சந்தைகளை விரிவுபடுத்தி ஐரோப்பாவை அடைய விரும்புகிறது. அமெரிக்க எரிவாயு ஏற்றுமதியில் 23% இப்போது ஐரோப்பிய ஒன்றியத்தை அடைகிறது. 2021ஆம் ஆண்டில் அது 21 பில்லியன் கன மீட்டர்களாக ஏற்றுமதி செய்யப்பட்டது என்று ஒரு மதிப்பீடு குறிப்பிடுகிறது.

பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், கிரீஸ், போர்ச்சுகல் மற்றும் இதர சிறிய நாடுகளும் இந்த விநியோகத்தை பெறும் ஐரோப்பிய நாடுகள் ஆகும். அமெரிக்க ஏற்றுமதிகள் ஐரோப்பாவின் எரிசக்தி விநியோகங்களின் பல்வகைப்படுத்தலுக்கும் அதன் ஆற்றல் பாதுகாப்பிற்கும் இன்றியமையாததாக சிலரால் பார்க்கப்படுகிறது. ஜனவரியில், ஒரு போர் போன்ற சூழ்நிலையில், ஐரோப்ப நாடுகள் ரஷ்யாவில் இருந்து இறக்குமதி செய்வதற்கு பதிலாக, அதிக எரிவாயுவை அமெ ரிக்காவிலிருந்து இறக்குமதி செய்தது.

நார்ட் ஸ்ட்ரீம் 2 என்பது நார்ட் ஸ்ட்ரீமின் விரிவாக்கம் ஆகும். 2011ஆம் ஆண்டு முதன்முறையாக இது பயன்பாட்டிற்கு வந்தது. நார்ட் ஸ்ட்ரீமைப் போன்றே இதுவும் இரண்டு பைப்லைன்களை கொண்டுள்ளது. ஆண்டு ஒன்றுக்கு 55 பில்லியன் கன மீட்டர் எரிவாயுவை எடுத்துச் செல்லும் தன்மை கொண்டது. 2020ம் ஆண்டில், உக்ரைன் வழியாக இதுவரை 168 பி.சி.எம். எரிவாயுவை ரஷ்யா ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்ததாக அறிவித்துள்ளது. ஜெர்மனி இதில் 56 பி.சி.எம். எரிவாயுவை வாங்கியுள்ளது. இத்தாலி 20 பி.சி.எம். மற்றும் நெதர்லாந்து 11 பி.சி.எம். எரிவாயுவை இறக்குமதி செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

எண்ணெய் மற்றும் எரிவாயு ஏற்றுமதி தான் ரஷ்யாவின் பிரதான பொருளாதார பிரிவுகள். ஐரோப்பா தான் இதன் சந்தையாக உள்ளது. எனவே தான் நார்ட் ஸ்ட்ரீம் 2 என்பது இரண்டையும் இணைக்கும் புள்ளியாக உள்ளது. இது தான் போரைத் தடுப்பது என்பது தன்னுடைய பணி என்று ஸ்கோல்ஸை சிந்திக்க வைத்திருக்கும் காரணியாகவும் உள்ளது. ■


- இந்தியன் எக்ஸ்பிரஸ்

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


- **1ஆம் 2ஆம் வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருக்களுடன் நெருங்கிய தொடர்புடைய உருவைத் தெரிவு செய்க.**

01)



(1) (2) (3)


02)



(1) (2) (3)

- **3ஆம் 4ஆம் வினாக்களில் கட்டத்தில் தரப்பட்டுள்ளவற்றை வகைப்படுத்தும் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

03)



| A | B | C | D | E | F |
|---|---|---|---|---|---|

(1)
A C
D E
B F

(2)
A C
D F
B E

(3)
A C
B D
E F

04)



| A | B | C | D | E | F |
|---|---|---|---|---|---|


(1)
A E
B D
C F

(2)
B F
D E
A C

(3)
E A
D C
B F


- **5ஆம் 6ஆம் வினாக்களில் உள்ள உருக்களை சேர்க்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.**

05)



(1) (2) (3)

06)



(1) (2) (3)

07) பின்வரும் பாடலில் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

……………………… வீதியில்
நீந்தும் அழகுப் புதுநிலா
பாலர் பாடி ஆடிட
பார்த்து மகழும் வெண்ணிலா

(1) நீலவான (2) நீண்ட (3) பரந்த

08) அண்ணாவைப் பற்றிக் கடும் கோபமாக இருந்த அப்பாவிடம் எதிர் வீட்டு முதியவர் அண்ணாவின் குறைகளைக் கூறிக் கொண்டிருந்தார். இச்செயலுக்கு மிகவும் பொருத்தமான உவமைத் தொடர்.

(1) பசுத்தோல் போர்த்திய புலி போல
(2) எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்த்தது போல
(3) மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல

## விடைகள்

| | |
|---|---|
| 01) 2 | 05) 3 |
| 02) 3 | 06) 1 |
| 03) 2 | 07) 1 |
| 04) 3 | 08) 2 |

## கல்வி tv CHANNEL-1

**18.02.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

## கல்வி tv CHANNEL - 2

**18.02.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மோடிக்கு எதிராக கறுப்புக்கொடி ஏற்றியோர் கடன் எரிபொருள் கப்பலை வரவேற்கிறார்கள்

## அரசை கிண்டலடிக்கிறார் சஜித் பிரேமதாஸ



கல்முனை, பெப். 18

**இந்திய அரசின் உதவியில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை திறந்து வைக்க இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வந்தபோது, அதற்கு எதிராக கறுப்பு கொடிகளை ஏற்றியவர்கள், கடனுக்கு கிடைத்த எரிபொருள் கப்பலை வரவேற்க தற்போது வைபவங்களை நடத்துகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

கல்முனை வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடனுக்கு கிடைத்த டீசலை ஏற்றிய இந்திய கப்பல் இலங்கை வந்தபோது, இரண்டு அமைச்சர்கள் சென்று வைபவ ரீதியாக வரவேற்றனர்.

கடனுக்கு வழங்கிய டீசலை ஏற்றி வந்த கப்பலை வரவேற்க வைபவத்தை நடத்திய நாடாக இலங்கை வரலாற்றில் பதிவாகும்.

கம் உதாவ, மகாவலி அபிவிருத்தி, 200 ஆடை தொழிற்சாலைகள் திட்டம், பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்குவதற்கு வைபவங்களை நடத்திய நாட்டில், கடனுக்கு கிடைத்த டீசலை ஏற்றி வந்த கப்பலை வரவேற்க வைபவத்தை நடத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது-என்றார். (அ)

# சோழர் கால ஆலயத்தில் சிவலிங்கம் அமைக்க பீடம்!

காரைதீவு, பெப். 18

சோழர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டு தற்போது சிதைவுற்றுள்ள அம்பாறை - காரைதீவு - மடத்தடி சிவன் ஆலய முன்றலில் சிவலிங்கம் நிறுவுவதற் கான பீடத்துக்கு அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அத்துடன், அருகிலுள்ள மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் புதிதாக அம்மன் அன்னதான மண்டபத்தை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் விழாவும் நடைபெற்றது.

அடிக்கல் நாட்டப்பட்ட பீடத்தில் சிவனருள் பௌண்டேசன் அனுசரணையில் மட்டக்களப்பு ஆதீன ஸ்தாபகரும் இயக்குநருமான மு. ஜெயபாலனின் ஏற்பாட்டில் எதிர்வரும் சிவராத்திரியன்று சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து வைக்கப் படவிருக்கிறது. பௌர்ணமி தினமாகையால் நேற்றுமுன்தினம் பெருந் தொகையான அம்மன் அடியார்களும் கலந்து கொண்டு பொங்கிப்படைத்து அன்னதானம் வழங்கி அம்மனை வழிப்பட்டனர். (ஐ)



# ஐக்கிய மக்கள் சக்தி இனவாதமற்ற கட்சி!

## காத்தான்குடியில் ரஞ்சித் எம். பி.

காத்தான்குடி, பெப். 18

சிங்களவர், தமிழர் மற்றும் முஸ்லிம்கள் என அனைவரும் ஒன்றுபட்டு, இந்த நாட்டில் அரசியல் செய்யக் கூடிய ஒரேயொரு கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தியே உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு, நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் உறுப்பினர்களை, மட்டக்களப்பு - காத்தான்குடியில் வைத்து நேற்றுமுன்தினம் சந்தித்தது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர், அனைத்து மக்களையும் இனவாதமற்று அரவணைத்து செல்லக் கூடிய ஒரு கட்சியாக எமது கட்சி உள்ளது. இன முரண்பாடுகளற்ற ஒரு தலைவராக சஜித் பிரேமதாஸவை காணக் கூடியதாக இருக்கின்றது. தெற்கில் எவ்வாறு அவர் வேலை செய்கிறாரோ அவ்வாறே வடக்கு, கிழக்கிலும் அவர் வேலை செய்கின்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் அனைவரும் இணையும் போதுதான் இந்த நாட்டிலுள்ள பொருளாதாரப் பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்னைளுக்கும் தீர்வு காணமுடியும்", என்றார். (ஐ)



# கிரானில் மணல் அகழ்வு; பொது மக்கள் கவனவீர்ப்பு

கிரான்,பெப். 18

அனுமதியின்றி ஓவியா விடுதி வளாகத்தில் முன்னெடுக்கப் படும் சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்கக்கோரி நேற்று முன்தினம் திருமலை வீதி கிரானில் பொது அமைப்புக்களினால் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு கிரான் கிறிஸ்தவ சேவை ஆச்சிரம வீதியில் இருந்து ஆரம்பமான எதிர்ப்பு பேரணியானது ஊர்வலமாக பிரதான திருமலை வீதி வழியாக வந்து ஓவியா சுற்றுலா விடுதிக்கு முன்பாக ஒன்று கூடி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். வாழைச்சேனை பொலிஸாரினால் நீதிமன்ற தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"தடை செய் ,தடை செய் சட்டவிரோத மணல் அகழ்வை தடை செய்," "நீச்சல் தடாகம் என்ற போர்வையில் மணல் அகழ்வதனை தடை செய்," "மீன் வளர்ப்பு என்ற போர்வையில் எமது வளத்தினை சுரண்டாதே" என்பன போன்ற கோஷங்களை எழுப்பி சுற்றுலா விடுதிக்கு முன்பாக நின்று தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். இந்த மணல் அகழ்வால் தங்கள் வீடுகள் இடிவதற்கு யார் பொறுப்பு, குடி நீருக்கு நாங்கள் எங்கே செல்வது, என்று போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கேள்விகளை எழுப்பினார்கள். பின்னர் தங்கள் கோரிக்கை அடங்கிய மகஜரை கோறளைப் பற்று பிரதேச சபை தவிசாளர் திருமதி சோபா ஜெயரஞ்சித் மற்றும் வாழைச்சேனை பொலிஸாரிடம் கையளித்தனர்.

குறித்த சுற்றுலா விடுதி வளாகத்தில் கடந்த 4 மாத காலமாக பெருமளவு மணல் அகழப்பட்டு தென்பகுதிக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.இதற்கு புவிசரிதவியல் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளதாகவும். அகழ்வுக்கான நியதிகள் எதுவும் பின்பற்றப் படாமல் மணல் அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் மக்கள் குற்ஞஞ்சாட்டினர். (ஐ)

# ஆசிரியர் சம்பள முரண் உயர் நீதிமன்றில் வழக்கு

திருகோணமலை, பெப். 18

1997 ஆம் ஆண்டு முதல் 2021 வரை ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வுக் கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக இலங்கை கல்வி நிருவாக அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கச் செயலாளரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான ஏ.எல்.முகம்மட் முக்தார் நேற்றுத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

1997 ஆம் ஆண்டு வெளியான பி.சி.பெரேரா சம்பள அறிக்கையின் மூலம் இழைக்கப்பட்ட சம்பள உயர்வு அநீதிக்கு நிவாரணமாக ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்ட தொடர் வேலை நிறுத்தங்கள் காரணமாக 2022 ஜனவரி முதல் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இச்சம்பள உயர்வு வழங்குவது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டபோது 1997ஆம் ஆண்டு தொடக்கம் 2021 வரையான காலத்தில் கடமையாற்றிய அதிபர், ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை. இது அவர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் பெரும் அநீதியாகும். ஏனெனில் 1997 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கடமையில் இருந்த அனைத்து அதிபர், ஆசிரியர்களும் இச்சம்பள முரண்பாட்டால் பாதிக்கப்பட்டனர். ஆகையினால் அவர்களுக்கும் இந்தச் சம்பள உயர்வு உரிமையானதாகும்.

அதிபர், ஆசிரியர்களுக்கு 2022 ஜனவரி முதல் அமுலாகியுள்ள சம்பள மாற்றமானது உண்மையில் சம்பள உயர்வல்ல. மாறாக 1997ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சம்பள முரண்பாட்டால் உருவான பாதிப்புகளுக்கான தீர்வாகும்.

ஆனால், 31.12.2021 வரை கடமையில் இருந்த ஆசிரியருக்கு இந்த அதிகரிப்பு மறுக்கப்பட்டு, மறுநாள் 01.01.2022 அன்று கடமையில் இருப்போருக்கு அதிகரிக்கப்பட்ட சம்பள அதிகரிப்பும் ஓய்வூதியமும் வழங்கப்பட்டு வருகிறது. இதனை அரசாங்கம் எவ்வாறு நியாயப்படுத்தும் எனக் கேள்வி எழுப்பினார்.

ஆகையினால் இத்தீர்வில் உள்ளடக்கப்படாத அதிபர், ஆசிரியர்களுக்கு நீதி கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் வழக்கிற்கு தமது சங்கம் பூரண ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்தார். (ஐ)

# சுவாமி விபுலானந்தரின் வீதி காப்பெற்றாக மாற்றமடைகிறது!

காரைதீவு, பெப். 18

முதல் தமிழ்ப்பேராசிரியர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த காரைதீவு வீதி கார்ப்பெற் வீதியாக புனரமைக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ் இவ் விபுலானந்தர் வீதி 500 மீற்றர் தூரம் காப்பெற்றாகிறது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை வீதியமைக்கும் வேலைத்திட்டத்தை நேற்றுமுன்தினம் ஆரம்பித்தது.வீதியின் இரு மருங்கிலும் வடிகான் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 12வருடங்களுக்கு முன்னர் இந்த வீதி கொங்கிறீட் வீதியாக அமைக்கப்பட்டபோதும், அது சிதைவடைந்து போக்குவரத்துக்கு கடினமானதாக மாறியது. மழைகாலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் இந்த வீதியால் போக்குவரத்து செய்வது கடினமாகக் காணப்பட்டது. இந்த நிலையிலேயே இந்த வீதி காப்பெற் வீதியாக மாற்றப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





# உக்ரைன் பதற்றத்தை தணிக்க விரைவில் இராஜதந்திர முயற்சி

## ஜப்பான் - பிரிட்டன் பிரதமர்கள் தெரிவிப்பு

ரோக்கியோ, பெப். 18

ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடா மற்றும் பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் ஆகியோர் உக்ரைன் பதற்றத்தை தணிக்க இராஜதந்திர முயற்சிகளைத் தொடர விரும்புவதாக உறுதியளித்துள்ளனர்.

இருநாட்டு தலைவர்களும் கடந்த புதன்கிழமை 25 நிமிடங்கள் தொலைபேசி வாயிலாக பேச்சுவார்த்தை நடத்தியதாக, ஜப்பானிய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இரு தலைவர்களும் உக்ரைனின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கான தங்கள் நிலையான ஆதரவை உறுதிப்படுத்தினர்.

அதே நேரத்தில் உக்ரைனைச் சுற்றியுள்ள நிலைமையை தீவிர அக்கறையுடன் கண்காணித்து வருவதாக தெரிவித்தனர்.

மேலும், வலுக்கட்டாயமாக ஒருதலைப்பட்சமான எந்த மாற்றத்தையும் தாங்கள் ஏற்க மாட்டோம் என்பதை உறுதிப்படுத்தினர்.

விரிவாக்கத்திற்கான தூதரக முயற்சிகளைத் தொடரவும் மற்றும் தொடர்ந்து நெருக்கமாக இணைந்து பணியாற்றவும் ஒப்புக்கொண்டனர்.

பாதுகாப்பு மற்றும் தற்காப்பு மற்றும் சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசிபிக்கை மேம்படுத்துவதில் ஒத்துழைப்பில் தங்கள் உறுதிப்பாட்டை பிரதமர்கள் உறுதிப்படுத்தினர்.

ஜனவரி பிற்பகுதியில், உக்ரைனைச் சுற்றியுள்ள பதற்றங்கள் அதிகரித்து வருவதால் பிரதமர் ஜோன்சன் ஜப்பானுக்கான தனது திட்டமிட்ட பயணத்தை இரத்து செய்ததாக கூறப்படுகிறது.

பயணத்தின்போது, அவர் கிஷிடாவைச் சந்தித்து உக்ரைன் நெருக்கடி மற்றும் தொற்றுநோயைச் சமாளித்து கார்பன் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் குறித்து விவாதிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. (அ)

# ரஷ்யா சொல்வது முழுவதும் பொய்!

## உக்ரைன் எல்லையில் இருந்து படைகளை நகர்த்தும் அறிவிப்பை அடியோடு நிராகரித்தது அமெரிக்கா!

நியூயோர்க், பெப். 18

உக்ரைனுடனான எல்லையில் இருந்து துருப்புக்களை நகர்த்துவதாக ரஷ்யா வெளியிட்ட கருத்து தவறானது என சிரேஷ்ட அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அண்மைய நாட்களில் எல்லையில் மேலதிகமாக 7,000 துருப்புக்கள் களமிறக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். ஏதேனும் ஒரு சாக்குப்போக்கை கூறி உக்ரைனை எந்த நேரத்திலும் ஆக்கிரமிக்க ரஷ்யா தயாராக உள்ளது எனவும் சர்வதேச ஊடகங்களிடம் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இராணுவப் பயிற்சிகள் நிறைவடைந்ததையடுத்து உக்ரைன் எல்லையில் இருந்து தனது படைகளை முந்தைய தளங்களுக்கு நகர்த்துவதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. உக்ரைனிடமிருந்து 2014 இல் ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்ட கிரிமியாவில் இருந்து யுத்த டாங்கிகள் வெளியேறுவதைக் காட்டும் வீடியோவை நேற்று முன்தினம் புதன்கிழமை ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டது.

எனினும் ரஷ்யா தனது படைகளை நகர்த்துவதற்கான எந்த ஆதாரமும் இல்லை என மேற்குலக நாடுகள் தெரிவித்து வருகின்றன. அண்மைய நாட்களில் ஆயிரக்கணக்கான மேலதிக துருப்புக்கள் உக்ரைன் எல்லைக்கு வந்துள்ளன. நேற்று புதன் கிழமையும் மேலதிக துருப்புக்கள் வந்துள்ளன என வெள்ளை மாளிகை சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.



இதேவேளை, உக்ரைன் எல்லையில் இருந்து ரஷ்ய துருப்புக்கள் திரும்புவதாக வெளியான அறிவிப்பை மட்டுமே நாங்கள் கேள்வியுற்றோம். ஆனால் அதற்கான நம்பத்தகுந்த ஆதாரங்கள் இல்லை என உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலென்ஸ்கி கூறினார். இவ்வாறான நிலையில் உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு முயற்சி குறித்த குற்றச்சாட்டுக்களை புடின் தொடர்ந்து மறுத்து வந்ததோடு, ஐரோப்பாவில் இன்னொரு போரை ரஷ்யா விரும்பவில்லை என்றும் கூறினார். எனினும் நவம்பர் முதல் பதற்றம் அதிகரித்து வருகிறது.

முன்னாள் சோவியத் குடியரசாகிய உக்ரைனுடன் ரஷ்யா ஆழமான கலாசார மற்றும் வரலாற்று உறவுகளைக் கொண்டுள்ளது. மேற்கத்திய நேட்டோ இராணுவக் கூட்டணியில் உக்ரைன் சேர போவதில்லை என்ற உத்தரவாதத்தை பெற புடின் விரும்புகிறார். நேட்டோவில் உக்ரைன் இணைவது ரஷ்யாவிற்கு அச்சுறுத்தலாக அமையும் என அவர் கருதுகிறார். இந்நிலையில் நேட்டோவில் உக்ரைன் இணையாது என்ற சட்டபூர்வமான உத்தரவாதத்தை அமெரிக்கா மற்றும் நேட்டோவிடம் புடின் கோருகிறார். எனினும் இத்தகைய உத்தரவாதத்தை வழங்க அமெரிக்காவும் நேட்டோவும் மறுத்துவிட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிட்னி கடற்கரையில் நீந்தியவர் வெள்ளை சுறா தாக்குதலில் பலி!



சிட்னி, பெப். 18

அவுஸ்திரேலியா - கிழக்கு சிட்னியில் உள்ள லிட்டில் வளைகுடாவில் வெள்ளைச் சுறாவின் தாக்குதலுக்கு உள்ளாகி நேற்று முன்தினம் ஒருவர் உயிரிழந்தார்.

59 ஆண்டுகளின் பின்னர் சிட்னியில் நடந்த இவ்வாறான பயங்கர சுறா தாக்குதல் இது வாகும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். வெள்ளைச் சுறா தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதை அடுத்து நகரின் பெரும்பாலான கடற்கரைகள் நேற்று வியாழக்கிழமை ஆட்கள் செல்ல அனுமதிக்கப்படாமல் மூடப்பட்டன. தாக்குதல் நடத்திய சுறாவை அதிகாரிகள் தேடி வருகின்றனர்.

கடலில் நீந்திக்கொண்டிருந்த நபரே சுறா தாக்குதலில் கொல்லப்பட்டார். உயிரிழந்த நபர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிட்னி நகர கடற்பகுதிகளில் இவ்வாறான சுறா தாக்குதல்கள் மிக அரிதானது. நகரப் பகுதியை அண்டிய கடற்கரையோரங்களில் விரிக்கப்பட்டுள்ள வலைகள் மற்றும் பிற தடுப்புக்களால் சுறாக்கள் போன்ற கடல் வாழ் உயிரினங்கள் ஊடுருவல் கடினமான தாகும். எனினும் எவ்வாறு பெரும் வெள்ளைச் சுறா இப் பகுதிக்கு வந்தது? என்பது குறித்து அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர். இந்தச் சுறாவை கண்டறிய நேற்று படகுகள் தேடுதலில் ஈடுபடுத்தப்பட்டன. அத்துடன், ஹெலிகொப்டர்கள் மற்றும் ட்ரோன்களை பயன்படுத்தியும் தேடுதல் இடம்பெற்று வருகிறது. சுறா தாக்குதலின்போது பொது மக்களால் எடுக்கப்பட்ட வீடியோ காட்சிகளின்படி தாக்குதல் நடத்திய வெள்ளைச் சுறா குறைந்தது மூன்று மீற்றர் நீளம் கொண்டதாக மதிப்பிட்டுள்ளதாக நியூ சவுத் வேல்ஸ் மாநில அரசு கூறியுள்ளது. நீந்திக் கொண்டிருந்த ஒருவரை பெரிய சுறா கொடூரமாகத் தாக்கியது. அலறல் சத்தம் கேட்டு நாங்கள் திரும்பி பார்த்தோம். அந்தத் சுறா நீந்திக்கொண்டிருந்தவரைத் தாக்கிவிட்டு வேகமாகத் தண்ணீருக்குள் சென்றுவிட்டது என சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் அவுஸ்திரேலிய ஏ.பி.சி. செய்திச் சேவையிடம் தெரிவித்துள்ளார். தாக்குதலை தொடர்ந்து இரண்டு மணி நேர தேடுதலின் பின்னர் கொல்லப்பட்டவரின் உடல் பாகங்களை அதிகாரிகள் மீட்டனர்.

அவுஸ்திரேலியாவில் பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக சுமார் 20 சுறா தாக்குதல்கள் பதிவாகின்றன. எனினும் சுறா தாக்குதல்களால் அவுஸ்திரேலியாவில் மனிதர்கள் இறப்பது மிகவும் அரிதானது. ஒரு நூற்றாண்டுக்கும் மேலான பதிவுகளில் அவுஸ்தி ரேலியாவின் சுறா தாக்குதல் இறப்பு விகிதம் வருடத்திற்கு ஒரு நபர் என்பதை விடக் குறைவானதாகும்.



# பெரு வெள்ளம், நிலச்சரிவால் பிரேசிலில் 94 பேர் உயிரிழப்பு!

ரியோ டி ஜெனிரோ, பெப். 18

பிரேசில் - பெட்ரோ போலிஸ் நகரில் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் திடீர் வெள்ளத்தில் சிக்கி குறைந்தது 94 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரியோ டி ஜெனிரோவின் வடக்கே மலைப்பகுதியில் அமைந்துள்ள பெட்ரோ போலிஸ் நகரம் தொடர் மழையால் பாதிக்கப்பட்டது.

இப்பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவால் மலைப்பகுதிகளில் உள்ள பல வீடுகள் அழிக்கப்பட்டன. அத்துடன், பெரும் வெள்ளத்தால் கார்கள் உள்ளிட்ட பெருமளவு வாகனங்கள் அடித்துச் செல்லப்பட்டன.

பேரழிவுகளைத் தொடர்ந்து பெட்ரோபோலிஸ் நகரில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நகருக்கு மீட்புக் குழுக்கள் விரைந்து நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி உயிருக்குப் போராடி வருவோரை மீட்கும் பணிகளை முன்னெடுத்துள்ளன.

தேடுதல் மற்றும் மீட்புக் குழுக்களால் இதுவரை 24 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். 94 மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என பிரேசில் அரசு உறுதி செய்துள்ளது.

இந்நிலையில் ரஷ்யாவிற்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள பிரேசில் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோ, பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி உதவிகள் வழங்கப்படும் எனக் கூறியுள்ளார். (அ)

ஈழநாடு





## டுபாய் சம்பியன்ஷிப் ஹாலேப் அடுத்த சுற்றில்!

டுபாய், பெப். 18

டுபாய் ரென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டியில் பிரபல வீராங்கனைகளான சிமோனா ஹாலேப், குவித்ரோவா ஆகியோர் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினர்.

டுபாயில் சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் ருமேனியாவின் சிமோன ஹாலேப் சக நாட்டவரான ருஷ்ஷை சந்தித்தார்.

இதில், 6 - 3, 6-2 என்ற செற் கணக்கில் ஹாலேப் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றோர் போட்டியில் முன்னணி வீராங்கனையான பெலாரஸின் சபலென்காவை குவித்ரோவா எதிர்கொண்டார். எனினும், இந்தப் போட்டியில் 6-4, 6-4 என்ற செற் கணக்கில் செக் குடியரசின் குவித்ரோவா இலகு வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு நுழைந்தார். (ஐ)



## தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் முதல் நாளில் நியூசி. முன்னிலை

கிறிஸ்ட்சேர்ச், பெப். 18

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் முதல் நாளிலேயே நியூசிலாந்து அணி ஆதிக்கம் செலுத்தி முதல் இனிங்ஸில் முன்னிலை பெற்றுள்ளது.

தென்னாப்பிரிக்க அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது. நேற்று ஆரம்பமான டெஸ்ட் தொடர், மார்ச் முதலாம் நாள் நிறைவுபெறுகிறது.

கிறிஸ்ட்சேர்ச்சில் ஆரம்பமான போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி, களத்தடுப்பைத் தெரிவு செய்தது. கடைசியில் அது சரியான முடிவாகவும் அமைந்தது.

தென்னாபிரிக்க அணி, 49.2 ஓவர்கள் மட்டும் விளையாடி 95 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. மேட் ஹென்றி அட்டகாசமாகப் பந்துவீசி 7 விக்கெட் களை சாய்த்தார். ஹம்ஸா அதிகபட்சமாக 25 ஓட்டங்கள் எடுத்தார். இதன்மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் நியூசிலாந்துக்கு எதிராகக் குறைந்த ஓட்டங்களை தென்னாபிரிக்க அணி எடுத்துள்ளது.

இதன்பிறகு விளையாடிய தென்னாபிரிக்க அணி, முதல் நாள் முடிவில் 39 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 118 ஓட்டங்கள் எடுத்துள்ளது. கொன்வே 36 ஓட்டங்கள் எடுத்தார். ஹென்றி நிகோல்ஸ் 37, நீல் வோக்னர் 2 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார்கள்.

முதல் நாளிலேயே முதல் இனிங்ஸில் 7 விக்கெட்கள் மீதமிருக்க, 21 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது நியூசிலாந்து. தென்னாபிரிக்க அணி வீரர்கள் 4 பிடியெடுக்கும் சந்தர்ப்பங்களையம் நழுவவிட்டு ஏமாற்றம் அளித்தனர். (ஐ)

# சுதந்திரக் கிண்ண உதைபந்து கிழக்கு அணி அரையிறுதியில்!

கொழும்பு, பெப். 18

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்திவரும் மாகாணங்களுக்கு இடையிலான சுதந்திரக் கிண்ணத்துக்கான தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு மூன்றாவது அணியாக நுழைந்தது கிழக்கு மாகாணம் தகுதிபெற்றுள்ளது.

மாத்தறையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 6ஆம் கட்ட லீக் போட்டியில் 3 - 0 என்ற கோல்கள் கணக்கில் மேல் மாகாணத்தை வெற்றிகொண்டதன் மூலம் கிழக்கு மாகாணம் 3ஆவது அணியாக அரையிறுதியில் விளையாட தகுதிபெற்றது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் சுற்றுப் போட்டி விதிகளுக்கு அமைய 2 அணிகள் சமபுள்ளிகளைக் கொண்டிருந்தால் அந்த இரண்டு அணிகளுக்கு இடையிலான (ஹெட் ரூ ஹெட்) போட்டியில் வெற்றி பெற்ற அணியே தரப்படுத்தலில் முன்னிலை பெறும்.

இந்த விதிகளுக்கு அமைய மேல் மாகாணம் கடைசிப் போட்டியில் வட மாகாணத்தை வெற்றிகொண்டு 10 புள்ளிகளைப் பெற்றாலும்கூட நேருக்கு நேர் போட்டியில் மேல் மாகாணத்தை கிழக்கு மாகாணம் வெற்றிகொண்டதால் அரையிறுதி வாய்ப்பை கிழக்கு மாகாணம் பெற்றுக் கொண்டது.




தற்போதைய புள்ளிகளின் அடிப்படையில், சப்ரகமுவ மாகாணம் 14 புள்ளிகள், வட மாகாணம் 12 புள்ளிகள், கிழக்கு மாகாணம் 10 புள்ளிகளுடன் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முதல் ரி - 20 போட்டியை வென்றது இந்திய அணி!

கொல்கத்தா, பெப். 18

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான முதல் இருபது -20 ஆட்டத்தில் இந்தியா 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கொல்கத்தாவில் புதன் கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் மேற்கிந்தியத்தீவுகள் 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 157 ஓட்டங்கள் எடுத்தது. அடுத்து இந்தியா 18.5 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 162 ஓட்டங்கள் எடுத்தது.

இந்த ஆட்டத்துக்கான பதினொருவர் இந்திய அணியில் ரவி பிஷ்னோய்க்கு வாய்ப்பளிக்கப்பட்டு, சர்வதேச இருபது -20 ஆட்டத்தில் அறிமுகமானார். மேற்கிந்தியத்தீவுகளில், பயிற்சியின்போது காயமடைந்த ஜசன் ஹோல்டருக்குப் பதிலாக ரோஸ்டன் சேஸ் களமிறங்கினார்.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்தியா பந்துவீச்சை தெரிவு செய்தது. மேற்கிந்தியத் தீவுகள் இனிங்ஸில் பிராண்டன் கிங் 4 உடன் வந்த கைல் மேயர்ஸ் 7 பௌண்ட்ரிகளுடன் 31 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தனர்.

மூன்றாவது வீரராக வந்த நிகோலஸ் பூரன் 4 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸர்களுடன் 61 ஓட்டங்கள் விளாசி அணியின் ஓட்டத்தை உயர்த்தினார். ரோஸ்டன் சேஸ் 4, ரோவ்மென் பவல் 2 ஓட்டங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

அகீல் /ஹசைன் சிக்ஸருடன் 10 ஓட்டங்கள் அடிக்க, ஒடின் ஸ்மித் 4 ஓட்டங்கள் சேர்த்து கடைசி பந்தில் ஆட்டமிழந்தார். ஓவர்கள் முடிவில் தலைவர் கிரன் பொலார்ட் 2 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 24 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்திய பந்துவீச்சாளர்களில் ரவி பிஷ்னோய், ஹர்ஷல் பட்டேல் ஆகியோர் தலா 2, புவனேஷ்வர் குமார், தீபக் சஹர், யுஜவேந்திர சஹல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய இந்திய அணிக்கு தலைவர் ரோஹித் சர்மா அதிரடியாக ஆடி 4 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 40 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழக்க, அவருடன் இறங்கிய இஷான் கிஷன் 4 பௌண்ட்ரிகளுடன் 35 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார்.

மூன்றாவது வீரராக இறங்கிய விராட் கோலி ஒரு பௌண்ட்ரியுடன் 17 ஓட்டங்களுக்கும், ரிஷப் பந்த் 8 ஓட்டங்களுக்கும் வெளியேற்றப்பட்டனர். சூர்யகுமார் யாதவ் - வெங்கடேஷ் ஐயர் இணையர் ஆட்டமிழக்காமல் அணியை வெற்றிக்குக் கொண்டு சென்றனர்.

முடிவில் சூர்யகுமார் 5 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 34, வெங்கடேஷ் 2 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 24 ஓட்டங்கள் அடித்திருந்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் தரப்பில் ரோஸ்டன் சேஸ் 2, ஷெல்டன் காட்ரெல், பாபியான் அலன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை எடுத்தனர். (ஐ)





## சம்பியன்ஸ் லீக் உதைபந்து பி. எஸ். ஜி. அணி வெற்றி!

பாரிஸ், பெப். 18

சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டப் போட்டியில் புதன்கிழமை ஆட்டத்தில் பாரிஸ் சென். ஜெர்மைன் (பி. எஸ். ஜி.) மன்செஸ்டர் சிற்றி அணிகள் வெற்றி பெற்றன.

இந்தப் போட்டியின் 16 அணிகள் சுற்றின் முதல் பகுதி ஆட்டங்கள் தொடங்கியிருக்கின்றன.

இதில் ஓர் ஆட்டத்தில் ரியல் மட்ரிட்டை சந்தித்த பி. எஸ்.ஜி. அணி 1-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

பிஎஸ்ஜி தரப்பில் கலியன் எம்பாப்வே (90,4’) கோல் அடித்தார். மற்றோர் ஆட்டத்தில் மன்செஸ்டர் சிற்றி 5 -0 என்ற கோல் கணக்கில் ஸ்போர் டிங் அணியை வீழ்த்தியது.

மன்செஸ்டர் சிற்றிக்காக ரியாத் மெஹ்ரெஸ் (7’), பெர்னாண்டோ சில்வா (17’, 44’), பில் போடன் (32’), ரஹீம் ஸ்டெர்லிங் (58’) கோல் அடித்தனர். (ஐ)

# சஜித்-சம்பிக்கவை இணைப்பதற்கு மூத்த உறுப்பினர்கள் தீவிர முயற்சி!



**கொழும்பு, பெப். 18**
**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையும், சம்பிக்க ரணவக்கவையும் நேரில் சந்திக்க வைத்து, முரண்பாடுகளை தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி கைக்கூடவில்லையென தெரியவருகின்றது.**

ஐக்கிய மக்கள் சக்தியுடன் சங்கமிக்கும் திட்டத்தில் இருந்த முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, திடீரென '43 ஆம் படையணி' எனும் அரசியல் இயக்கத்தை ஆரம்பித்தார். குறித்த இயக்கத்தின் மாநாட்டையும் வெற்றிகரமாக நடத்தியுள்ளார்.

2024 இல் நடைபெறும் என எதிர்ப்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தே சம்பிக்க இவ்வாறு செயல்படுகின்றார் என விமர்சனங்கள் எழுந்துள்ளன. சம்பிக்கவின் சில நகர்வுகளால் அவர்மீது சஜித்தும் கடும் அதிருப்தியில் இருக்கின்றார்.

மாநாட்டின் பின்னர் சம்பிக்கவை சஜித் வெளிப்படையாகவே விமர்சிக்க ஆரம்பித்துள்ளார். இந்நிலை தொடருமானால் எதிரணி பலவீனமடையும், இரண்டாக உடையும் என்பதால் இவ்விருவரையும் சமரசப்படுத்தும் முயற்சியில் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் இறங்கியுள்ளனர். எனினும், அந்த முயற்சி இன்னும் கைகூடவில்ல என தெரியவருகின்றது. (அ)





# விசுவமடுவில் நிலாமுற்றம்

முல்லைத்தீவு, பெப். 18

விசுவமடு மத்திய சனசமூக நிலையமும் விசுவமடு விஞ்ஞானக் கல்வி நிலையமும் இணைந்து நடத்திய நிலாமுற்றம் - கலை விழா நிகழ்வு கடந்த புதன்கிழமை மாலை விசுவமடு மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

ஆசிரியர் வே. பிரசாத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலை உளநல வைத்திய நிபுணர் மருத்துவர் மா. ஜெயராசாவும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி முதல்வர் ச.லலீசனும் கௌரவ விருந்தினராக கவிஞர் மாணிக்கம் ஜெகனும் கலந்துகொண்டனர்.

விசுவமடு விஞ்ஞான கல்வி நிலையத்தின் நிர்வாகி பொறியியலாளர் பொ. கெங்கேஸ்வரன் தொடக்க உரையாற்றினார்.

மாணவர்களின் கலை நிகழ்வுகள் பல இடம்பெற்றன.

இனிவரும் காலங்களில் ஒவ்வொரு பௌர்ணமியின் போதும் நிலா முற்றம் - கலை ஆற்றுகை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

# கோதுமை மாவின் விலை உயர்வால் சிறு பேக்கரிகள் மூடப்படும் நிலை!

கொழும்பு, பெப். 18

கோதுமை மாவின் விலை அதிகரிப்பு மற்றும் மூலப்பொருட்களின் பற்றாக்குறையால் நாட்டிலுள்ள பேக்கரி உரிமையாளர்கள் தொழிலைக் கைவிடும் நிலையில் உள்ளனர்.

இரத்தினபுரி, கஹவத்தை, கொடகவெல, பல்லேபெத்த மற்றும் இறக்குவானை ஆகிய பிரதேசங்களிலுள்ள சிறிய அளவிலான பேக்கரிகள் தொழில் துறையைப் பாதிக்கும் பல்வேறு பிரச்னைகள் காரணமாக அதன் செயற்பாடுகளை நிறுத்தியுள்ளன.

கோதுமை மா போன்ற பண்டங்களின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில், இந்தப் பண்டங்களின் தரம் குறைந்துள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தப் பின்னணியில் நாட்டில் நடமாடும் பேக்கரி தயாரிப்பு விற்பனையாளர்களும் வேலையின்மை அபாயத்தை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# எரிபொருள்கள் இறக்குமதி செய்யும் அதிகாரம் மின்சார சபைக்கு இல்லை

கொழும்பு, பெப். 18

மின்சார சபைக்கு எரிபொருள் இறக்குமதி செய்யும் அதிகாரம் இல்லை என கனிய வள மற்றும் வர்த்தக முற்போக்கு சேவையாளர் சங்கத்தின் தலைவர் பந்துல சமன் குமார தெரிவித்தார்.

இதற்கு தமது சங்கம் உள்ளிட்ட கனிய எண்ணெய் தொழிற்சங்கங்களும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளதாக கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஒன்றரை மாத காலத்துக்கு இலங்கை மின்சார சபைக்கு தேவையான எரிபொருளை ஒரே தடவையில் இறக்குமதி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார். (அ)

# மின்சாரம் தாக்கி ஒருவர் பலி!

கொழும்பு, பெப். 18

மன்னம்பிட்டி காவல்துறை பிரிவுக்குட்பட்ட மஹவெவ பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் வயலில் காணப்பட்ட தனியார் நிறுவனமொன்றுக்கு சொந்தமான மின்கம்பியிலிருந்து சட்டவிரோதமாக மின்சாரத்தை பெற்றுக் கொள்ள முயன்றபோதே அவர் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மஹவெவ - செவனபிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 58 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார். (அ)

# நோர்வே வதிவிட பிரதிநிதி நேற்று மன்னார் செயலகத்துக்கு விஜயம்

மன்னார், பெப். 18

நோர்வே நாட்டின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி டிரைன் ஜோரான்லி எஸ்கெடல் நேற்று வியாழக்கிழமை மன்னாருக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

நேற்றுக் காலை 8.45 மணி அளவில் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு விஜயம் செய்த அவர், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டிமெலுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது மன்னாரில் இடம்பெறும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக அவர் விரிவாக ஆராய்ந்தார்.

மன்னார் மாவட்டத்தில் பெண்கள் அபிவிருத்தி தொடர்பாக தாம் கவனம் செலுத்துவதாகவும் மாவட்ட பெண்களின் நிலை குறித்தும் அவர் கலந்துரையாடினார்.

மன்னார் பகுதிகளில் இந்திய மீனவர்களின் பிரச்னை, பறவைகள் சரணாலயம், காற்றாலை மின்சாரம், கழிவு மீன் திரவ உரம் தயாரிப்பு, மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் அரசாங்க அதிபரிடம் அவர் கலந்துரையாடி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கட்டுநாயக்கவிலிருந்து நீர்கொழும்புக்கு 40 நிமிடங்களில் பயணிப்பதற்கு வாய்ப்பு

கொழும்பு, பெப். 18

கட்டுநாயக்கவிலிருந்து நீர்கொழும்பு நகரத்துக்கு 40 நிமிடங்களில் பயணிப்பதற்கான ரயில் சேவையை ஆரம்பிக்க போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அதற்கமைவாக ,கட்டுநாயக்க - நீர்கொழும்பு ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையில் இரட்டை ரயில் பாதைகளை அமைக்கும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

இதற்கான ரயிலை உத்தியோகபூர்வமாக சேவையில் ஈடுபடுத்தும் நிகழ்வு போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன் மூலம் கொழும்பு கோட்டையிலிருந்து கட்டுநாயக்க வரை செல்லும் பயணிகளுக்கு தற்போது 40 நிமிடங்களுக்குள் சென்றடைவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

இதன் நிர்மாணப் பணிகளுக்கென 4 ஆயிரத்து 446 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை களுத்துறை - கொழும்பு, வெயங்கொட -கொழும்பு ,அவிசாவளை - கொழும்பு ஆகிய நகரங்களுக்கிடையிலும் இவ்வாறான ரயில் சேவைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்தார். (அ)

# துப்பாக்கிச் சூடு நடத்தி கடத்தப்பட்ட குழந்தை!

## ஹொரணையில் அதிர்ச்சிச் சம்பவம்

கொழும்பு, பெப். 18

பாட்டியின் பாதுகாப்பில் இருந்த குழந்தை கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் ஹொரணை, கந்தன பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

குறித்த குழந்தையின் தந்தையான ஹெரண நீலக்க என்பவரினால் இந்த கடத்தல் சம்பவம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் கொலைச் சம்பவங்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரான ஹொரண நீலக்க என்பவர், சம்பந்தப்பட்ட வீட்டுக்கு முன்னால் வந்து ரி-56 துப்பாக்கியினால், வானை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தி இவ்வாறு குழந்தையை கடத்திச் சென்றுள்ளார்.

சந்தேகநபர் கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் தனது மனைவியின் கை, காலைகள் கூரிய ஆயுதத்தால் துண்டு துண்டாக வெட்டி படுகாயங்களுக்கு உள்ளாக்கியிருந்ததாக பொலிஸார் கூறினர். அந்த சம்பவத்தின் பின்னர் அவரின் குழந்தை, சந்தேகநப ரின் மாமியாரின் பாதுகாப்பில் இருந்துள்ளதுடன் இன்று குழந் தையை பாதுகாப்பு இல்லத்தில் சேர்க்க தீர்மானிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த சம்பவம் தொடர்பில் ஹொரணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

ஈழநாடு



## அதிர்ஷ்டத்தை...

பொதியைப் பெறுவதற்காக 60 ஆயிரம் ரூபாய் கட்டி ஏமாந்துள்ளார் சங்கரத்தையை சேர்ந்த ஆண் ஒருவர்.

இந்த சம்பவங்கள் தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

சித்தங்கேணி பகுதியை சேர்ந்த பெண் ஒருவருக்கு தொலைபேசி அழைப்பை எடுத்த மர்ம நபர்கள், அதிர்ஷ்ட இலாப சீட்டில் பெருமளவு பணம் கிடைத்துள்ளது. அதனை பெறுவதற்கு ஒரு இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் பணத்தை இலங்கை வங்கியில் வைப்பிலிடுமாறு கூறியுள்ளனர்.

இதனை நம்பிய குறித்த பெண்ணும் தன்னுடைய தங்க நகைகளை அடகு வைத்து பணத்தை இலங்கை வங்கியில் வைப்பு செய்துள்ளார். அதன் பின்னர் அந்த தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பு எடுத்தபோது அந்த இலக்கம் துண்டிக்கப்பட்டிருந்தது. இதன்பின்னரே தான் ஏமாற்றப்பட்டமையை அறிந்த பெண் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

இதேபோல் சங்கரத்தை துணவி பகுதியில் உள்ள ஆண் ஒருவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட நபர்கள் வெளிநாட்டிலிருந்து பெறுமதியான பொதி ஒன்று வந்துள்ளதாகவும், அதனை பெறுவதற்கு 60 ஆயிரம் ரூபாயை சம்பத் வங்கியில் வைப்பிலிடுமாறு கூறியுள்ளனர்.

அவரும் பணத்தை வைப்பிலிட்ட பின்னர் அந்த இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்திய நிலையில் அதுவும் துண்டிக்கப்பட்டிருந்தது.

அவரும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். (ஐ)

## கச்சதீவுத்...

ஒன்றில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கச்சதீவு அந்தோனியார் தேவாலய திருவிழா வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ளது. இந்தத் திருவிழாவில் பங்கேற்க 500 பக்தர்களுக்கே - இலங்கையர்களுக்கே அனுமதி வழங்கப்படும் என்று யாழ். மாவட்ட செயலர் அண்மையில் அறிவித்திருந்தார்.

இதனிடையே, இந்திய பக்தர்களும் திருவிழாவில் பங்கேற்க அனுமதிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இந்தநிலையிலேயே திருவிழாவில் பங்கேற்க பக்தர்களுக்கு தடை விதிப்பது என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் என்று கடற்றொழில் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், கடந்த ஆண்டு போன்று இம்முறையும் அருட்தந்தையர்கள் மட்டுமே பூசை, திருப்பலிகளை ஒப்புக் கொடுப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பூஸ்டர் டோஸ்...

திருவிழாவில் பங்கேற்போர் 3ஆவது அல்லது பூஸ்டர் தடுப்பூசியை பெற்று 2 வாரங்கள் நிறைவடைந்திருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், மன்னார் மாவட்டத்தில் கடந்த 16 நாட்களில் 377 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 2022 ஆம் ஆண்டில் மட்டும் 578 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்றால் பெப்ரவரி மாதம் 3 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன. தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றால் 39 பேர் மரணித்துள்ளனர். ஒமைக்ரோன் அலை பரவல் தொடங்கியதில் இருந்து இறந்தவர்களின் எண்ணிக்கை மன்னார் மாவட்டத்தில் 3 ஆகும். ஒவ்வொரு 120 நோயாளர்களுக்கும் ஒருவர் என்ற வகையில் இறப்பு இடம் பெற்றுள்ளது.

இது டெல்டா அலை பரவும் போது ஏற்பட்ட இறப்புகளுடன் ஒப்பிடும் போது குறைவாக இருந்தாலும்,இதனை கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒரு எண்ணிக்கையாக காணப்படுகின்றது.

எனவே, பொது மக்கள் தமது 2 வது தடுப்பூசியை பெற்றுக் கொண்ட பின்னர் மூன்று மாதங்கள் நிறைவடைந்தது இருந்தால் கட்டாயமாக 3 வது தடுப்பூசியை பெற்றுக் கொள்ள வேண்டும். அத்துடன், சுகாதார வழிகாட்டுதல்களையும் கடைப்பிடிக்க வேண்டும் - என்றார். (ஐ)

## அப்பாவிகளை...

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வலியுறுத்தி மக்களிடம் கையெழுத்துப் பெறும் மனுவில் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் ஒப்பமிட்டார். இது தொடர்பில் அவரிடம் செய்தியாளர்கள் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தையடுத்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால், தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னமும் நீதி வழங்கப்படவில்லை. குற்றவாளிகளைத் தப்பிவிட்டு அப்பாவிகளைச் சிறையில் அடைத்தால் எப்படி நீதி கிடைக்கும்? அதனால்தான் இன்று நாம் சர்வதேசத்திடம் நீதி கோரி நிற்கின்றோம்.

இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் வடக்கு, கிழக்கு, தெற்கு என நாடெங்கும் வாழும் மக்கள் பலர் துன்பங்களைச் சந்தித்துள்ளனர். அப்பாவிகளைச் சிறையில் அடைக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் எதற்கு? எனவே, இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும் அல்லது முழுமையாக மாற்றப்பட வேண்டும். இதை வலியுறுத்தியே அதற்கான மனுவில் நான் கையெழுத்திட்டுள்ளேன்” - என்றார். (ஐ)

## வாயில்களை...

குள் நுழைய முடியாதவாறு இராமநாதன் வீதியில் நின்றிருந்தனர்.

கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட மாணவர் ஒருவரை பல்கலைக்கழக நிர்வாகம் அங்கீகரிக்க மறுப்பதாகத் தெரிவித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக பேரவையால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்ட ஒருவரை மாணவர் ஒன்றியத் தலைவராக அங்கீகரிக்க முடியாது என்று பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்து வருகின்றது.

இதனிடையே நீண்டகாலமாக மாணவர் ஒன்றியத் தலைவர் பதவி வெற்றிடமாக உள்ளமையாலேயே புதிய தலைவரை பல்கலைக்கழக நிர்வாகத்தின் பங்களிப்பு இன்றி தெரிவு செய்ததாக பல்கலைக்கழகத்தை முடக்கிய மாணவர்கள் தெரிவித்தனர்.

எனினும், சில மணி நேரத்தின் பின்னர் இந்தப் போராட்டம் முடிவுக்கு வந்தது. போராட்டக்காரர்களும் தங்கள் கோரிக்கையிலிருந்து பின்வாங்கியுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

## அரசின் பங்காளி...

தயாரித்து எதிர் வரும் 2ஆம் திகதி அரசாங்கத்திடம் கையளிக்க இந்த அணியினர் தீர்மானித் துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இது சம்பந்தமாக மற்றுமொரு சந்திப்பை அமைச்சர் விமல் வீரவன்ஸ அல்லது உதய கம்மன்பில ஆகியோரின் வீட்டில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ)

## தொற்றுக்கு...

4 பெண்களுமாக 8 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 13 ஆண்களும் 6 பெண்களுமாக 19 பேரும் அடங்குவர்.

இதேவேளை, கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 926ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

# வெளிநாடு செல்வோருக்கு நான்காவது டோஸ் தடுப்பூசி

கொழும்பு, பெப். 18

வெளிநாடுகளுக்கு செல்பவர்களுக்கு, அவர்கள் செல்லும் நாட்டின் தேவைக்கு ஏற்ப நான்காவது டோஸ் கொரோனா தடுப்பூசியை வழங்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத் துவர் அசேல குணவர்தன இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

உயர்கல்விக்காக அவுஸ்ரேலியாவுக்கு சென்ற மாணவர் குழுவொன்றுக்கு கடந்த காலங்களில் இவ்வாறான விசேட தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட் டார்.

குறித்த நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசி மற்றும் தடுப்பூசித் திட்டம் குறித்தும் வெளிவிவகார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

# “தனிமைப்படுத்தல் காரணமாகவே கருத்தரங்கில் பங்கேற்கவில்லை!”

யாழ்ப்பாணம், பெப். 18

கொரோனா தொற்று தனிமைப்படுத்தல் காரணமாகவே தமிழ்த் தேசியக் கட்சிகள் முன்னெடுத்த கருத்தரங்கில் பங்கேற்கவில்லை என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த வலியுறுத்தி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதிய கட்சிகள் நேற்றுமுன்தினம் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் கருத்தரங்கு ஒன்றை நடத்தியிருந்தனர். இதில், தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவோ அல்லது அந்தக் கட்சியின் பிரதிநிதிகளோ பங்கேற்றிருக்கவில்லை என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில், கொரோனா தொற்று தனிமைப்படுத்தல் அன்றைய தினமே நிறைவடைந்தது என்றும், மருத்துவர்களின் ஆலோசனையாலேயே தான் அதில் பங்கேற்கவில்லை எனவும் அவர் ஈழநாடுவுக்குத் தெரிவித்தார்.

அத்துடன், அன்றைய தினம் நடைபெற்ற கையெழுத்துப் போராட்டத்திலும்கூட தாம் கையொப்பமிட்டவுடனேயே அங்கிருந்து சென்றுவிட்டார் என்றும் சுகாதார விதிகளை பின்பற்றியே பங்கேற்றார் என்றும் அவர் விளக்கமளித்துள்ளார். (ஐ)

# ஹக்கீம், ரிஷாத்துடன் இனி கூட்டணி இல்லை

### சஜித் அணி திட்டவட்டம்

கொழும்பு, பெப். 18

எந்தவொரு தேர்தலாயினும் எதிர்வரும் காலங்களில் ஐக்கிய மக்கள் சக்தி கிழக்கு மாகாணத்தில் தனித்தே போட்டியிடுமென்று கட்சியின் செயலாளர் பாராளுமன்ற உறுப் பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி விக்கையில்-

“இனிவரும் காலங் களில் ஐக்கிய தேசிய கட்சி விட்ட தவறுகளை ஐக்கிய மக்கள் சக்தி ஒரு போதும் செய்யமாட்டாது. நாட்டிலுள்ள 160 தொகுதிகளுக்கும் அமைப் பாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அந்தந்த தொகுதி அமைப்பாளர் களே பொதுத் தேர்தலில் வேட்பாளர் களாக நிய மிக்கப்படுவர்.

கட்சி சம்பந்தப் பட்ட எந்த வேலைத் திட்டமாயினும் அமைப்பாளர் ஊடாகவே முன்னெடுக்கப்படும்.

கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்ற கட்சிகள் எம்முடன் இணைந்து எமது வேட்பாளர் பட்டியலில் போட்டியிட்டு, எமது ஆதரவாளர்களினதும் வாக்குகளைப் பெற்று, வெற்றி பெற்ற பின்னர் அவர்கள் அரசாங்கத்தில் இணைந்து விடுகின்றனர்.

இதனால் பாராளுமன்றத்தில் எமது கட்சியின் பலம் மலினப்படுத்தப்படுகிறது. மாற்றுக் கட்சியினருக்கு வாய்ப்பளிப்பதால் எமது கட்சி ஆதரவாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். இது பற்றி இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இனிவரும் எந்தவொரு தேர்தலிலும் இவ்வாறான தவறுகள் நடக்க இடமளிக்கமாட்டோமென்று உறுதியளிக்கிறேன். இது விடயத்தில் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மிகவும் உறுதியாக இருக்கிறார்-என்றார். (அ)

## திங்களன்று...

தற்போது அமைச்சரவைப் பத்திரம் மூலம் மாற்றங்களை ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். அது நாயின் வேலையை கழுதை மேற்கொள்வதைப் போன்றது”, என்று சங்கத்தின் மத்திய சபை உறுப்பினர், மருத்துவர் பிரசாத் கொலம்பகே குறிப்பிட்டார். (ஐ)

## இந்த வருட...

உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைச்சர் அவற்றுக்கான தேர்தலை ஒரு வருடத்துக்கு ஒத்திவைத்துள்ளார். எவ்வாறாயினும் இந்த வருடம் செப்ரெம்பர் 20ஆம் திகதிக்குப் பின்னர் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கும்.

மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான சட்டப் பிரச்னைகளுக்கு பாராளுமன்றம் ஊடாகத் தீர்வு காணப்பட வேண்டும். கொரோனா வைரஸ் சூழ்நிலைகளுக்கு மத்தியில் சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றி தேர்தலை நடத்த நாம் எந்தநேரத்திலும் தயாராக இருக்கிறோம் - என்றார். (ஐ)

## வெளிநாடு...

மத்திய சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக வெளிநாட்டுப் பயணத்திற்கான பி. சி. ஆர். பரிசோதனைக்கான கட்டணமாக சகலரிடமும் ரூபாய் 6,500 அறிவிடப்படும்.

வெள்ளிக்கிழமை முதல் பணத்தைச் செலுத்தி பற்றுசீட்டை பதிவின்போது சமர்ப்பித்தல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## எரிபொருள்...

பெற்றோலியக் கூட்டுத் தபானம் மாத்திரமன்றி கூட்டுத்தாபனத்தின் கடன் தொகை அரச வங்கிக் கட்ட மைப்பை நெருக்கடிக்குள்ளாக்குமென வும் அவர் குறிப்பிட்டார்.

நுண்பொருளியலுக்கான சகல காரணிகளையும் பாதுகாத்துக் கொள்வதற்கு மிகவிரைவில் தற்போது எடுக்க வேண்டிய சரியான நடவடிக்கை, எரிபொருள் விலையை அதிகரிப்பதாகும் எனவும் மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## தாதியர்களின்...

னர் தாதியர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

எனினும் அமைச்சரவையில் முன்மொழியப்பட்ட யோசனையை சுகாதார அமைச்சர் சமர்ப்பித்ததை அடுத்து பணிப்புறக்கணிப்பை இடைநிறுத்துவதற்கு அவர்கள் இணக்கம் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு Eelanadu

# 2 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் மாதாந்தம் இலங்கைக்கு வருவர்

கொழும்பு, பெப். 18

இலங்கைக்கு மாதாந்தம் 2 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என எதிர்பார்ப்பதாக சுற்றுலாத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் தனிநபர் அல்லது குடும்பமாக இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வந்திருந்ததாகவும் எனினும் தற்போது சுற்றுலாக் குழுவாக இலங்கை வர ஆரம்பித்துள்ளமையை அவதானிக்க முடிகிறதாகவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த மாதத்தின் முதல் 15 நாட்களில் மாத்திரம் 50 ஆயிரம் 326 பேர் சுற்றுலா பயணிகளாக இலங்கை வந்துள்ளனர் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி இந்த ஆண்டு ஒரு இலட்சத்து 32 ஆயிரத்து 653 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகைத் தந்துள்ளதாகவும் அந்த அமைச்சு கூறியுள்ளது. (அ)

# அருட்தந்தை ஜுட் கிரிஷாந்தவிடம் மூன்று மணித்தியாலம் வாக்குமூலம்



கொழும்பு, பெப். 18

அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த நேற்று குற்றப் புலனாய்வுப் பிரிவில் மூன்று மணிநேர வாக்குமூலமொன்றை வழங்கினார்.

ஏப்ரல் 21 தாக்குல் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்பு கூறவேண் டும் என, சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரண துங்க வெளியிட்ட கருத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

கடந்த டிசெம்பர் 10ஆம் திகதி செய்யப்பட்ட இந்த முறைப்பாடு தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக்கொள்ள அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த, குற்றப்புலானாய்வு பிரிவுக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தார்.

அதன்படி, முற்பகல் 9.45 மணியளவில் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த சென்றார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் கருத்து மற்றும் ஏப்ரல் தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறும், சட்டநடவடிக்கை எடுக்குமாறும் தாம் கோரியுள்ளதாக அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவிலிருந்து வெளியேறிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டார். (அ)

# நீராடச்சென்று காணாமல்போன இளைஞர் நேற்று சடலமாக மீட்பு!

## நிலாவெளி கடற்கரையில் சம்பவம்

திருமலை, பெப். 18

திருகோணமலை - நிலாவெளி கடற்கரை யில் நீராடச் சென்ற இளைஞன் காணாமல்போயிருந்த நிலையில் அந்த இளைஞனின் சடலம் கரையொதுங்கியுள்ளதாக குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் தலாவ - தம்பகஹவெல, பத்திய முல்ல பகுதியைச் சேர்ந்த கே.என். நளின் பிரியந்த என்ற 21 வயதான இளைஞன் என பொலிஸார் தெரிவித்தனர்.

தனியார் தொழிற் சாலை ஒன்றில் கடமை யாற்றும் ஊழியர் கள் சிலர் சுற்றுலா மேற்கொண்டு நேற்றுமுன்தினம் திருகோணமலை நிலாவெளி கடற்கரைக்கு சென்று நீராடியுள்ளனர்.

அதன்போது, மூவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டிருந்த நிலையில் அவர் களில் இருவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டிருந்தபோதும் இளைஞரொருவர் காணாமல் போயிருந்தார்.

இந்நிலையில் கடற்படையினரும், உப்புவெளி பொலிஸ் உயிர்காக்கும் பிரிவினரும் இணைந்து தேடுதலை மேற் கொண்டிருந்தனர். நேற்று காலை குறித்த சடலம் கரையொதுங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# வடக்கு மக்கள் பிரச்னைகள் குறித்து வெளிப்படையாக விவாதிக்கப்படும்

## ஆளுநர் ஜீவன் தியாகராஜா கூறுகிறார்



யாழ்ப்பாணம், பெப். 18

**வடக்கு மாகாணத்தில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னை தொடர்பில் துறைசார்ந்த அதிகாரிகள் மற்றும் சமூக அமைப்புகளுடன் வெளிப்படைத்தன்மையுடன் கலந்துரையாடல் நடத்தப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சிவில், துறைசார் குழுக்களுடன் குறித்த கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு வழங்கிய முறைப்பாடுகள் தொடர்பில் வெளிப்படைத் தன்மையுடன் மக்கள் மத்தியில் குறித்த விடயங்கள் தொடர்பில் விவாதிக்கப்பட உள்ளது.


சமைத்த உணவின் விலை, தொழில்முனைவோர், கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவித்தல், பண்ணை விலை மற்றும் காய்கறிகளின் சில்லறை விலை, விவசாயிகளுக்கான செலவுகள், விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள், அத்தியாவசிய உள்ளீடுகளின் செலவுகள், விவசாய சேவைகள் துறை, வட மாகாண விவசாய அமைச்சகத்தின் திட்டங்கள், படகுகள் பழுது, நிதியுதவி, நங்கூரம், குளிர்பதனம், தொழில், திட்டங்கள் ஆகியவை குறித்து வெளிப்படையாக விவாதிக்கப் படும்-என்றார். (அ)

# வவுனியா, மன்னார் கால்நடை வளர்ப்போருடன் இராஜாங்க அமைச்சர் ஹேரத் கலந்துரையாடல்

வவுனியா, பெப். 18

வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட கால்நடை வளர்ப்பாளர்களுடன் இராஜாங்க அமைச்சர் டி. பி.ஹேரத் சந்திப்பொன்றை முன்னெடுத்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் இந்த கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. இதன்போது குறித்த மாவட்டங்களில் கால்நடை வளர்ப்பாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், அதற்கான தீர்வுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.



குறிப்பாக பால்மாவுக்கு பதிலாக திரவப்பாலை பொதுமக்கள் பயன்பாட்டுக்காக உற்பத்தி செய்வது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், மேய்ச்சல் தரை தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

வனவள திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவித்து மேய்ச்சல் தரைகளாக பயன்படுத்துவது தொடர்பாகவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதுடன் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுபவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்குவதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

இந்த கலந்துரையாடலில் அரச அதிபர்களான ஸ்ரான்லி டிமெல், பி.ஏ.சரத்சந்திர, வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களங்களின் பணிப்பாளர்கள், கால்நடை வைத்தியர்கள், கால்நடை வளர்ப்பாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# வவுனியா வைத்தியசாலையில் சிசு மரணம் உடன் விளக்கம் கோரியது சுகாதார அமைச்சு

கொழும்பு, பெப். 18

வவுனியா வைத்தியசாலையில் சிசு ஒன்று மரணம டைந்தமை தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் கோரிக் கைக்கு அமைவாக சுகாதார அமைச்சு விளக்கம் கோரியுள்ளது.

சுகாதார அமைச்சின் மருத் துவ சேவைகள் மேலதிக செயலாளர் வைத்தியர் சுனில் டி அல்விஸ், வவுனியா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்த கடிதத்திலேயே இவ்வாறு விளக்கம் கோரப்பட்டுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு வவுனியா வைத்தியசாலையின் 7 ஆம் விடுதியில் 2020 டிசெம்பர் 14 ஆம் திகதி பிறந்த குழந்தை ஒன்று மரணமடைந்திருந்தது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் வைத்தியசாலையின் கவனக்குறைவினாலேயே தனது குழந்தை மரணமடைந்ததாக ஜனாதிபதி செயலகம், சுகாதார அமைச்சு மற்றும் ஆளுநர் அலு வலகம் என்பவற்றுக்கு முறைப்பாடு செய்துள்ளதுடன், சட்ட நடவடிக்கையையும் முன்னெடுத்து வருகின்றார்.

குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத் திய ஜனாதிபதி செயலகத்தின் மூத்த உதவிச் செயலாளர் (பொது செய்திகள்) மல்காந்தி ராஜபக்ஷவிடமிருந்து சுகாதார அமைச்சுக்கு விளக்கம் கோரியும், விசாரணை அறிக்கை கோரியும் கடிதம் அனுபப்பட்டுள்ளது.

இதனையடுத்து சுகாதார அமைச்சினால் வவுனியா வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் விளக்கம் கோரப்பட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**

6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
7.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**

12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-மாரி-02,சாருலதா திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**

7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்-காதல்



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகசோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்